267
2-53

# ஆண்மை

புதுமைப்பித்தன்

ஸ்டார் பிரசுரம்

# ஆண்மை

புதுமைப்பித்தன்

ஸ்டார் பிரசுரம்

திருவல்லிக்கேணி சென்னை—5.

முதற் பதிப்பு செப்டம்பர், 1947.
இரண்டாம் பதிப்பு மார்ச், 1953.

விலை ரூபாய் ஒன்று.

STAR PUBLICATIONS
Triplicane :: MADRAS—5.

அச்சிட்டோர் : கமர்ஷியல் பிரிண்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ்,
46, அரண்மனைக்காரத் தெரு, சென்னை-1.

# முன்னுரை

ஒரு சமயம், பெர்னார்டுஷாவிடம் நீங்கள் எழுதிய ‘அந்த’ ஏன் ‘அப்படி’ இருக்கிறது என்று கேட்டதற்கு, அவர் பின்வருமாறு பதில் சொன்னாராம்: பத்து வருஷத்துக்குள் ஒரு மனிதனுடைய உடம்பில் உள்ள ஜீவ அணுக்கள் யாவும் அடியோடு மறைந்து புதியவை அந்த ஸ்தானத்தை வகிப்பதால், பத்து வருஷங்களுக்கு முன் இருந்த அதே மனிதன் இப்பொழுது இருப்பதாகக் கொள்ள முடியாது. அந்தப் புஸ்தகம் எழுதிய பெர்னார்டுஷா பத்துவருஷங்களுக்கு முன்பே மறைந்துவிட்டான். இப்பொழுது உங்கள் முன்பாக உட்கார்ந்து பேசிக்கொண்டு இருக்கும் ஆசான் வேறு. இவன் ‘அவன்’ எழுதியதற்கு ஜவாப்தாரி அல்ல.

—என்று தமது கருத்து வளர்ச்சியை, (மாறுதலை) குறிப்பிட்டுக் கேட்பவர் வாயை அடைத்தாராம். அதே மாதிரி ஷாவின் சமத்காரத்தைப் பின்பற்றி இந்தக் கதைகளுக்கு வக்காலத்து வாங்கிச் சமாதானம் சொல்லும் நோக்கம் எனக்குக் கிடையாது. தவளைக் குஞ்சு ஆரம்பத்தில் மீனைப்போல் இருந்தாலும் தவளையின் தன்மையை உள்ளடக்கமாகக் கொண்டிருக்கிறது. அதே மாதிரி இக்கதைகளும், ‘இத்தவளையின்’ தன்மைகளை மறைமுகமாகக் கொண்டிருப்பதனால், இவற்றைப் பிரசுரத்திற்கு லாயக்கானவை என்று கருதி வெளியிட்டிருக்கிறேன். இக்கதைகள் யாவும் நான் எழுத ஆரம்பித்துச் சுமார் ஆறு மாதங்களுக்குள் அமைந்த மனநிலையைக் காட்டுவனவாகும். இவற்றில் பெரும்பான்மையாக எனது மன நிலையே சித்திரிக்கப்பட்டிருக்கிறது. இவற்றில் வரும் கதா பாத்திரங்கள் போல நான் எனது கருத்துகளுக்கு பொருந்தியவையாக பிடித்துவைத்த களிமண் பொம்மைகள். அவற்றிற்கு இருக்கும் உயிரும் வேகமும் என் ஆத்திரத்தின் அறிகுறி. அவை மனித ரூபம் பெற்றவையே ஒழிய, மனிதப் பண்பும் இயல்பும் உடைய சிருஷ்டிகள் அல்ல. பேரளவு துன்பத்தின் சாயை படியாது வெறும் உயிர்ப் பிண்டமாக

வாழ்ந்த ஒரு வாலிபன், திடீர் என்று உலகத்தில் இயல்பாக இருந்துவரும் கொடுமைகளையும், அநீதிகளையும், சமூகத்தின் வக்கர விசித்திரங்களையும் கண்டு, ஆவேசமாக, கண்டதைத் தனது மன இருட்டில் தோய்த்துச் சொல்லிய பேய்க் கனவுகளாகும். எனது கதைகளின், அதாவது, பூர்வ கதைகளின் கரு அது தான். அவற்றில், கதைக்கு உரிய, கதைப் பின்னல் கிடையா. அவற்றிற்கு ஆரம்பம் முடிவு என்ற நிலைகளும் பெரும்பான்மையாகக் கிடையா. மன அவசத்தின் உருவகம் கதைகள் என்பதை ஒப்புக்கொள்ளுவதானால், அவை கதைகள் ஆகும். இம்மாதிரியான முறையை அனுஷ்டித்து மேல்நாட்டில் கதைகள் பிரசுரமாவது சகஜம். அந்த முறையை முதல் முதலாகத் தமிழில் இறக்குமதி செய்த பொறுப்பு அல்லது பொறுப்பின்மை என்னுடையதாகும்.

மணிக்கொடிப் பத்திரிகையானது வெளிவரும் முன்பு எத்தனையோ இலக்கியப் பத்திரிகைகள் இருக்கத்தான்செய்தன. ஆனால், புதிய பரிசீலனைகளுக்கு இடங்கொடுக்கும், உற்சாகமூட்டும், வரவேற்கும் பத்திரிகைகள் அதற்கு முன்போ பின்போ கிடையாது. அந்தப் பத்திரிகையை ஆரம்பித்த லக்ஷியவாதியான கே. ஸ்ரீனிவாசன் அவருடைய அந்தக் 'குற்றத்திற்காக' (?) பாஷைப் பிரஷ்டம் செய்யப்பட்டவர்போல, வேற்று மாகாணத்திலே வேற்று பாஷையிலே பத்திரிகைத் தொழில் நடத்தும் பாக்கியம் கிடைக்கப்பெற்று வாழ்ந்து வருகிறார். காலத்துக் கேற்றபடி உடுக்கடிக்கும் கோட்டான்களும், ஆவேசத்தோடு சீறுவதுபோல 'பம்மாத்து' செய்துகொண்டு இருக்கும் கிழட்டுப் புலிகளும், பாஷையையும் பாஷையின் வளர்ச்சியையும் பாழ்படுத்திக்கொண்டு இருக்கும்படி அனுமதித்துவரும் தமிழரின் பாஷா அபிமானத்தைக் கோவில் கட்டித்தான் கும்பிடவேண்டும். அன்று மறுமலர்ச்சி என்ற ஒரு வார்த்தை புதிய வேகமும் பொருளும் கொண்டது. அதைச் சிலர் வரவேற்றார்கள். பலர் கேலி செய்தார்கள்; பெரும்பான்மையோர் அதைப்பற்றி அறியாதிருந்தார்கள். மணிக்கொடி பொருளாதார நிர்ப்பந்தம் என்ற நபரால் சிசுஹத்தி செய்யப்பட்டு அசிரத்தை என்ற முனிசிப்பல் குப்பைத் தொட்டியில் எறியப்பட்டது. மூச்சுப் பேச்சற்றுக்

கிடந்த அந்தக் குழந்தையை எடுத்துவந்து ஆசை என்ற ஒரே அமுதூட்டி வளர்ப்பதற்காக நானும் பி. எஸ். ராமையா என்ற நண்பரும், எங்களைப்போலவே உத்சாகத்தை மட்டும் மூலதனமாகக் கொண்ட இன்னும் சில சக எழுத்தாளர்களும் சேர்ந்து நடத்தி வந்தோம். அது இரண்டு மூன்று வருஷங்களில் கன்னிப் பருவம் எய்திக் கண்ணை மயக்கும் லாவண்யத்தைப் பெறும் சமயத்தில் அதைக் கைப்பிடித்து இழுத்துக்கொண்டு ஓடும் நண்பரைப் பெற்றோம். அவர் அவளை ஒருவருக்கு விற்றார்: விற்ற உடனே அவளுக்கு ஜீவன்முக்தி இந்தக் கலிகாலத்தில் கிடைத்தது. இதுதான் மணிக்கொடியின் கதை. இதுதான் தமிழிலே புதிய பரிசீலனைகள் செய்ய வேண்டும் என்று கோட்டை கட்டியவர்களின் ஆசையின் கதை. இந்தக் கதையின் ஒரு அம்சம் எனது கதைகள்.

மணிக்கொடிப் பத்திரிகையில் எழுதியவர்களில் பெரும் கேலிக்கும், நூதனம் என்பதனால் ஏற்படும் திக்பிரமைக்கும் ஆளான ஒரே கதாசிரியன் நான். சரஸ்வதி பத்திரிகை ஆசிரியர் என்ற தலைப்பில் நையாண்டி செய்யப்பட்ட கௌரவம் எனக்கு ஒருவனுக்குத்தான் கிடைத்தது. கருத்தின் வேகத்தையே பிரதானமாகக்கொண்டு வார்த்தைகளை வெறும் தொடர்பு சாதனமாக மட்டும் கொண்டு தாவித் தாவிச் செல்லும் நடை ஒன்றை நான் அமைத்தேன். அது நானாக எனக்கு வகுத்துக் கொண்ட ஒரு பாதை. அது தமிழ்ப் பண்புக்கு முற்றிலும் புதிது. அதைக் கையாண்ட நானும் கல்வி கற்றதின் விளைவாக பாஷைக்குப் புதிது. இதனால், பலர் நான் என்ன எழுதுகிறேன் என்பது பற்றிக் குழம்பினார்கள். சிலர் நீங்கள் எழுதுவது பொதுஜனங்களுக்குப் 'புரியாது' என்று சொல்லி அனுதாபப்பட்டார்கள். அந்த முறை நல்லதா, கருத்து ஓட்டத்திற்கு வசதி செய்வதா என்பதை அதே முறையில் பலர் எழுதிய பின்புதான் முடிவு கட்ட முடியும். அந்த முறையை நானும் சிறிது காலத்திற்குப் பிறகு கைவிட்டு விட்டேன். காரணம் அது சௌகரியக் குறைவுள்ள சாதனம் என்பதற்காக அல்ல. எனக்குப் பல முறைகளில் கதைகளைப் பின்னிப் பார்க்கவேண்டும் என்ற ஆசையினால் அதைக் கைவிட்டு வேறு வழிகளைப் பின்பற்றினேன். இன்று

திரும்பிப் பார்க்கும்போது அவை உலக வளர்ச்சியில் பரிணாம வாதத்தினர் சொல்வதுபோல இலக்கிய வளர்ச்சியின் தெருவடைச் சான் சந்துகளாக அங்கேயே வளர்ச்சித் தன்மை மாறி நின்று விட்டன. இன்று அவற்றை ஆற அமரப் படித்துப் பார்த்துத் தான் முடிவு கட்டவேண்டும். எனது முயற்சி பலிக்காமல் போயிருக்கலாம். அதனால் முறை தப்பானது என்று முடிவு கட்டி விடக்கூடாது. நான் அறியாமல் வகுத்துக்கொண்ட எனது பாதையைப்பற்றி இன்னும் ஒரு வார்த்தை. நான் எந்தச் சமயத்தில் இந்தத் தவளைப் பாய்ச்சல் நடையை பின்பற்றினேனோ அதே சமயத்தில் மேலை நாடுகளில் அதுவே சிறந்த சிகரமாகக் கருதப் பட்டது என்பதைச் சமீபத்தில் நான் ஒரு இலக்கிய நண்பரிடம் பேசிக் கொண்டிருந்தபோது கேட்டு அறிந்தேன். இலக்கிய சிங்காசனத்தில் ஏறி அமர்ந்துகொள்ள எனக்குத்தான் உரிமை என்று கட்சி பேச நான் இந்தக்கருத்தைச் சொல்ல வரவில்லை. கருத்துக்கள் நமது தேசத்து மன உளைச்சல்களின் உருவகமாக இருந்தாலும் என் போக்கு உலக இலக்கியத்தின் பொதுப் போக்கோடு சேர்ந்து இருந்தது என்பதை எடுத்துக் காட்டவே இதைக் குறிப்பிட்டேன்.

இனிமேல் படித்துப் பாருங்கள்

*29—8—47* — புதுமைப்பித்தன்

# கதைகள்


1. ஆண்மை
2. கடிதம்
3. நன்மை பயக்குமெனின்
4. வழி
5. தனி ஒருவனுக்கு
6. புதிய நந்தன்
7. பறிமுதல்
8. புதிய கந்தப் புராணம்

## ஆசிரியரின் பிற நூல்கள்

புதுமைப்பித்தன் கதைகள்

தெய்வம் கொடுத்த வரம்

முதலும் முடிவும்

பளிங்குச் சிலை

பிரேத மனிதன்

வாக்கும் வக்கும்

நமது இலக்கியம்

உலக அரங்கு

# ஆண்மை

ஸ்ரீனிவாசனுக்குக் கலியாணமானது நினைவில் இல்லை. ஏன் என்றால் அது பெப்பர்மின்ட் கலியாணம். ஸ்ரீனிவாஸன் பெற்றோர்கள் பெரியவர்களாகியும், குழந்தைப் பருவம் நீங்காது பொம்மைக் கலியாணம் செய்ய ஆசைப்பட்டார்கள். வெறும் மரப் பொம்மையை விட, தங்கள் நாலு வயதுக் குழந்தை சிமாச்சு மேல் என்று பட்டது. பிறகு என்ன? பெண் கிடைக்காமலா போய்விடும்? ஆத்தூர்ப் பண்ணை ஐயர் மகள் ருக்மிணிக்கு இரண்டு வயது. கலியாணம் ஏக தடபுடல். பெற்றோர் மடியிலிருந்த படியே ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸனுக்கும் ருக்மிணி அம்மாளுக்கும் திருமணம் நடந்தது. அந்தச் சாக்கில் சஷ்டியப்த பூர்த்திக்கு முன்பே, திருமண மேடையில் உட்காரும் பாக்கியம் இரு சம்பந்திகளுக்கும் கிடைத்தது தான் மிச்சம்.

கலியாணம் என்ற பதத்திற்கு அகராதியில் ஒரு அர்த்தம் இருக்கலாம். கவிஞனது வியாக்யானம் ஒன்று இருக்கலாம். அதெல்லாம் எனக்குத் தெரியாது. நடைமுறை உலகத்திலே இந்த மகத்தான கலியப்தத்திலே, திருமணம் என்றால் குலப் பெருமை இளத்தும் கலகாரம்பம் என்று பெயர்.

ஸ்ரீனிவாஸன் தகப்பனார் ஆத்தூர்ப் பண்ணையாருக்கு இளைத்தவரல்ல. ஆத்தூர்ப் பண்ணையாரும் ஸ்ரீனிவாஸன் தகப்பனாருக்கு மசியக் கூடியவரல்ல. இப்படி இருவருக்கும் ஆரம்பித்த மௌனமான துவந்த யுத்தம், நாளுக்கு நாள் வளர்ந்தது. சீர்வரிசை, மரியாதை, இத்யாதி...... இத்யாதி. பரமேச்வர ஐயர் (ஸ்ரீனுவின் தகப்பனார்) தனது பெருமைக் கேற்றபடி, ஆத்தூர்ப் பண்ணை ஐயர் நடந்து கொள்ளவில்லை என்ற கம்ப்ளெய்ண்ட் (Complaint). அதற்காதாரமாக, "மாப்பிள்ளை யென்று துரும்பைக் கிள்ளிப் போட்டாலும் விறைத்துக் கொண்டு தான் நிற்கும்; அதற்கு முன் பண்ணைப் பெருமையின் ஜம்பம் சாயாது" என்பார்.

ஸ்ரீனிவாசனும் ருக்மிணியும் துவந்த யுத்தத்தில் கலந்து கொள்ளவில்லை. அதைப்பற்றி இருவருக்கும் தெரியாது. பரமேச்வர ஐயர் ஒவ்வொரு வருஷமும் தன் புத்திரனைச் சம்பந்தி வீட்டிற்கு அனுப்பி வைப்பார். பிறகு இல்லாத நோணு வட்டம் எல்லாம் சொல்லிக் கொண்டு வருஷம் பூராவாகவும் பேச, அது ஒரு 'ஐட்டம் நியூஸ்'. ஸ்ரீனிவாசனுக்குச் சம்பந்தி வீட்டிற்குப் போவதென்றால் ரொம்பக் குஷி. விஷயம் ருக்மிணி இருக்கிறாள் என்ற நினைப்பினால் அல்ல, பக்ஷணம் கிடைக்கும்; நாலைந்து நாள் 'மாப்பிள்ளை' 'மாப்பிள்ளை' என்ற உபசாரம்; விளையாட்டு; அப்பாவின் கோபமும் அடியும் எட்டாத இடம்; மேலும் விளையாடுவதற்கு நிரம்பப் பயல்கள், இதுதான்; மாமா வீடு என்றால் வெகு குஷி.

இப்படிப் பத்து வருஷங்கள் கழிந்தன.
சம்பந்திச் சண்டை ஓயவில்லை.

சீமாவும் சின்னப் பையனாக இருந்து மெதுவாகப் பெரிய மனிதனாகி விட்டான். பரமேச்வர ஐயருக்குப் பையன் வளர வளர குதூஹலம். ஆத்தூர்ப் பண்ணைக்குப் 'புத்தி கற்பிக்க' சாந்தி முகூர்த்தம் என்ற கடைசித் துருப்பை உபயோகிக்க வேண்டிய காலம் நெருங்குவதில் மிகுந்த சந்தோஷம். ஆத்தூர்ப் பயலை என்ன செய்கிறேன் பார் என்று தம் மனைவியிடம் வீரம் பேசினார். அவருடைய சகதர்மிணியும் தனது கணவன் வீர புருஷன் என்பதில் மிகுதியும் களித்தாள்.

சீமாவும் மாமனார் வீட்டுக்குப் போவது படிப்படியாகத் தடைப்பட்டுப் போயிற்று. முதலில் கொஞ்சம் வருத்தந்தான். ஆனால் சீமா புஸ்தகம் படித்தவனல்லவா? அதில் தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்று படித்திருக்கிறான். தந்தையின் சொல் மந்திரத்தை விட, கை மந்திரத்தில் அதிக அனுபவம் உண்டு. சீமாவும் மாமனாரை வெறுக்க ஆரம்பித்தான். காரணமும் கொஞ்சம் உண்டு. ருக்மிணி முன்போல் அவனுடன் விளையாடுவதில்லை. ஓடி ஒளிய ஆரம்பித்து விட்டாள். ருக்மிணியின் தகப்பனாரும், அவன் அங்கு ஒரு தடவை சென்றிருந்த பொழுது தகப்பனாரைப் பற்றிப் பேசிக் கொண்

டிருந்ததை எல்லாம், ருக்மிணி வந்து அவனிடம் சொல்லி யழுதாள்.

அவளுக்கு, சீமாவின் தகப்பனுரை எப்படிப் பேசலாம் என்ற வருத்தம். குழந்தை யுள்ளத்தில் தன் இரகசியத்தைச் சீமாவிடம், அவன் அங்கு சென்றிருக்கும்பொழுது சொல்லி விட்டாள். அதிலிருந்து ருக்மிணி என்ருல் சீமாவிற்குத் தனது உள்ளம் என்ற ஒரு பற்றுதல். ஆனுல் மாமாவின் மீதும் அத்தையின் மீதும் அடங்காத கோபம் அந்தக் கோபத்தில் ஏற்பட்ட வெறுப்பின் சாயை, சீமாவின் மனவுல கத்தில் ருக்மிணியைத் தீண்டியதும் உண்டு.

ருக்மிணி புஷ்பவதியானுள்.

சடங்குகளும் ஏக தடபுடலாக நடந்தன. ஆத்தூர்ப்பண்ணே ஐயர் நேரில் வந்து அழைத்தும், இங்கிருந்து ஒருவரும் போக வில்லே.

ருக்மிணிக்கு மிகுந்த வருத்தம். தன் சீமா வராமல் இருப்பாரா என்று ஏங்கினுள். ஆத்தூர் ஐயரும் குழந்தை ருக்மிணிக்குச் சாந்தி முகூர்த்தம் செய்விக்க ஓர் நல்ல தினத் தைப் பார்த்து, பரமேச்வர ஐயருக்கு ஒரு கடிதம் எழுதினுர்.

பரமேச்வர ஐயருக்கு இந்தக் கடிதத்தைக் கண்டதும் உள்ளம் ஆனந்தக் கூத்தாடியது. தான் நெடுநாள் எதிர்பார்த் திருந்த தினம் வந்த உத்ஸாகத்தில் அன்று விருந்து நடத்தி ஞர். பிறகு சம்பந்திக்கு ஒரு நீண்ட கடிதம் ஏறக்குறையக் குற்றப் பத்திரம் ஒன்று எழுதி, அதில் 5000 ரூபாய் கையில் வந்தால்தான் தன் மகன் சாந்தி முகூர்த்தம் செய்வான் என்றும், மேலும் சம்பந்தி ஐயரவர்களின் சீர் வரிசைக் குறைவுகளே எல் லாம், இப்பொழுது சரிக்கட்டி மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டும் என்றும் எழுதி இருந்தார்.

இந்த விஷயத்தில் சீமாவிற்கு மனத்தாங்கல்தான்; இவ் வளவிற்கும் ருக்மிணி பாபம் என்ன செய்வாள் என்று நினே தான். ஆனுல் தகப்பனுருக்கு அடங்கிய பிள்ளே. சொல்லவும் முடியவில்லே, மெல்லவும் முடியவில்லே.

இந்த விஷயத்தைப் பற்றி ருக்மிணி தனக்குக் கடிதம் எழுதுவாள் என்று எதிர்பார்த்தான். அவள் எழுதினால் அவன் நாவல்களில் படித்த கதாநாயகிபோல், ருக்மிணியும் தன்னைக் காதலிக்கிறாள் என்று அப்பாவின் கோபத்தையும் எதிர்ப்பதற்குத் தயாராகி யிருந்தான்.

ஆனால் கடிதம் வரவில்லை.

சீமாவிற்குப் பெரிய ஏமாற்றமாக இருந்தது. ஒரு வேளை நாவல்களில் படித்த மாதிரி......வேறொருவனைக் காதலிக்கிறாளோ என்னவோ! பொம்மைக் கலியாணம் செய்யப்பட்ட பெண், வேறொருவனைக் காதலித்து...கடைசியாக பிரம்ம சமாஜத்தில் கலியாணம் செய்து கொள்ளுவதுதான் நாவல் சம்பிரதாயப்படி சுவாரஸ்யமான முடிவு. அப்பொழுதுதான் கதாசிரியனும், வாசகர்களே என்று ஆரம்பித்துக் குழந்தைக் கலியாணத்தின் கொடுமைகளைப் பற்றி வியாசம் எழுதமுடியும்...... சீமாவின் உள்ளத்தில் என்ன என்னவோ எண்ணங்கள் எல்லாம் குவிந்தன. ஆனால் ருக்மிணியின் மீது ஓர் பெரிய ஏமாற்றம்தான் மிச்சம்.

கடிதம் வரவில்லை.

சீமாவிற்கு ஒரு யோசனை தோன்றியது. ருக்மிணியை இரகசியமாகக் கவனித்தால், அல்லது அவளைச் சந்தித்தால், தன்னைக் காதலிக்கிறாளா என்று கண்டுபிடித்து விடலாமே என்று தோன்றியது. அப்பாவிற்குத் தெரியாது போகவேண்டும்.

சீமா இப்பொழுது சென்னையில் படித்துக்கொண்டிருக்கிறான். அப்பாவிற்குத் தெரியாமல் போவது அவ்வளவு கஷ்டமல்ல. பள்ளிக்கூட மாணவனுக்கா தகப்பனாரிடம் இருந்து பணம் தருவிக்க வழி தெரியாது?

## II

ஆத்தூர் ஐயரவர்களுக்குப் பண்ணைத் திமிரும் சிறிது உண்டு. பரமேச்வரன் தன் வழிக்கு வராமல் எங்கு போய் விடுவான் என்று தைரியம். தன் சொல் சக்தியால், பரமேச்வர

ஐயர் வேறு பெண் சீமாவிற்குப் பார்க்க எத்தனித்தால் தடுத்துவிடலாம் என்ற தைரியம் இருந்தது. பயல் சீமாவும் இப்படி இருப்பானு என்றுகூடச் சில சமயம் பேசியதுண்டு. இதைக் கேட்ட சமயமெல்லாம் ருக்மிணிக்குக் கண்ணீர்வரும்.

"அவனை மறந்துவிடு. கொட்டத்தை அடக்கிவிடுகிறேன்" என்று ருக்மிணியிடம் சொல்லிய காலங்களும் உண்டு.

"போங்கள் அண்ணு" என்று கண்ணீர் விட்டு உபவாசம் இருப்பதே ருக்மிணியின் வழக்கமாகி விடும்போல் இருந்தது. அவள் கணவன் என்ற வார்த்தையின் பூரண அர்த்தத்தை யறிந் தவள் அல்ல. உள்ளத்திலே ஏதோ, தன்னையறியாத பக்தி, பாசம் சீமாவின் மீது வளர்ந்துகொண்டே இருந்தது.

சிறு பருவத்தில் அவனுடன் விளையாடியதெல்லாம் ஒன்றிற்குப் பத்தாக உள்ளத்தில் விளையாட ஆரம்பித்தன. எத்தனையோ தடவை 'அவருக்குக் கடுதாசு' எழுத வேண்டும் என்று காகிதங்களை எடுத்து முன்வைத்த நேரங்கள் உண்டு. ஆனால் என்ன நினைத்துக் கொள்வாரோ. மாமாவிற்குத் தெரிந்தால் பெரிய அவமானம் என்ற பயம்.

ஊர் வாயை மூட முடியுமா? ருக்மிணி வாழாவெட்டியாகி விட்டாள் என்று ஊர்க் கிழங்களிடையே பேச்சு. ஊர்ச் சிறுமிகளுக்கும் ருக்மிணி என்ருல் சிறிது இளக்காரம். இதனுல் ருக்மிணிக்கு ஆறுதலாக ஒருவரும் இல்லை. அவள் தாயார் அவள் தகப்பனுரின் எதிரொலி.

புஷ்பங்களிலே பலவகையுண்டு. சிலவற்றைப் பார்த்ததும் குதூகலம், களிப்பு இவை யெல்லாம் பிறக்கும். சில சாந்தியை யளிக்கும். சில உள்ளத்தில் காரணமற்ற துக்கத்தை, சோகத்தை எழுப்பும்.

ருக்மிணி இயற்கையிலேயே நல்ல அழகி. சிறு பிராயத்திலேயே ஆளைவிழுங்கும் விழிகள். அதுவும் இயற்கையின் பரிபூரண கிருபை இருக்கும்பொழுது! ஆனல் கூம்பிச் சாம்பிய உள்ளத்தின் உள்ளொளி, அவளது துயரம் தேங்கிய கண்களில் பிரதிபலிக்கும். அவளைப் பார்க்கும் பொழுது, நம்மையறியாத பெருமூச்சு வரும்.

ஊர்ப் பேச்சிற்கும் பொச்செரிப்பிற்கும் பயந்து, அதிகாலையிலேயே ஆற்றிற்குச் சென்றுவிட்டு வந்து விடுவது வழக்கம். ஆத்தூரில் ஊருக்குச் சற்றுக் கூப்பிடு தூரத்தில்தான் ஆறு. ருக்மிணி பயமற்றவள்.

அன்று விடியற்கால நிலா பால்போல் காய்ந்து கொண்டிருக்கிறது.

ருக்மிணி குடம் எடுத்துக்கொண்டு குனிந்த தலை நிமிராமல் ஆற்றிற்குச் செல்லுகிறாள்.

கண்களிலே சற்றுக் கூர்ந்து, முகத்துடன் நெருங்கி நோக்கினால் சந்திரனில் பிரதி பலிக்கும் கண்ணீர்.

அந்த ஆறுதான் அவள் கவலையைக் கேட்கும்.

ஆத்தூர் சிறிய ஸ்டேஷன். மூன்று மணி வண்டி கொஞ்ச நேரம்தான் நிற்கும். சீமா அதிலிருந்து இறங்கினார். எப்படியாவது ருக்மிணியை அவள் பெற்றோருக்குத் தெரியாமல் காண்பது என்ற நினைப்பு. கண்டு அவளிடம் என்ன பேசுவது, என்ன சொல்வது என்றெல்லாம் அவன் நினைக்கவில்லை. அவளை எப்படித் தனியாக, இரகசியமாகச் சந்திப்பது என்று கூட எண்ணவில்லை. வீட்டின் பக்கம் சென்றால் வெளி முற்றத்திற்கு வரமாட்டாளா? வந்தால் தன்னை அடையாளம் கண்டு கொள்ள மாட்டாளா என்ற நம்பிக்கை. அவன் அவளைச் சந்தித்து வெகு நாட்களாகி விட்டதென்ற, ஏறக்குறைய ஐந்து வருஷத்திற்கு மேலாகி விட்டதென்ற நினைப்பே இல்லை.

ஸ்டேஷனிலிருந்து வந்தால்—அதாவது அங்கு வண்டிகள் கிடையாது. நடந்து வந்தால், அந்தப் பாலமற்ற ஆற்றைக் கடக்க வேண்டும்.

நடந்து வருகிறான்.

கரையேறி அக்ரகாரத்திற்கு நேராகச் செல்லும் பாதை வழியாக நடந்து வருகிறான். மனதில் பயம். நெஞ்சம் பட் பட் என்று அடித்துக் கொண்டது.

எதிரே ஒரு பெண் வருகிறாள்.

அவள் தான்.

விதியும் கோழை சீமாவின்மேல் கருணை கூர்ந்ததுபோல் அவளை யனுப்பியது.

பால்போன்ற நிலாதான்.

சிற்றாடை கட்டிக்கொண்டு சில சமயம் சீமாவென்று கூப்பிட்டு, பின்னோடு அலைந்து கொண்டிருந்த ஒரு குழந்தை, திடீரென்று பதின்மூன்று வயது நங்கையாக, அதிலும் அழகியாக மாறியதைக் கண்டால், யாருக்குத்தான் அந்த மங்கிய நிலவில் அடையாளம் கண்டு பிடிக்க முடியும்?

அவள் தன்னைக் கடந்து செல்லும்வரை கூர்ந்து கவனித்தான். உள்ளம் அவள்தானென்று காரணமற்றுக் கூறியது. ஆனால் அவள் ஜாடையெல்லாம்.........மெதுவாகப் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டால்.........நம்பிக்கை யாரைவிட்டது!

"ருக்மிணி!"

அந்தப் பெண் திடுக்கிட்டு நின்றாள்.

"ருக்மிணி!"

வந்தவள் ருக்மிணிதான். தன் பெயரைக் கூப்பிடக் கேட்டதும் பயம். வாயடைத்த பயம். ஆனால் குரல் ஜாடை எல்லாம் இரண்டாம் முறை சப்தத்தில் யாருடையது மாதிரியோ பட்டது.

"ருக்மிணி!" என்றான் மறுபடியும். சற்றுத் தைரியமாக "யாரது?" என்றாள்.

"நான் தான் சீமா!"

வார்த்தைகளைக் கேட்டதும் அவள் உள்ளத்திலே தாங்க முடியாத குதூகலம்; அதில் பிறந்த சோகம், கண்களில் ஜலம் தாரை தாரையாகப் பொங்கியது. அழவேண்டுமென்றிருந்தது, சிரிக்க வேண்டுமென்று தோன்றியது. கண்டத்தில் ஏதோ ஒன்று கட்டியாக உருளுவதுபோல் இருந்தது. உதடுகள் அழ வேண்டுமென்று துடித்தன. உதட்டை மெதுவாகக் கடித்துக் கொண்டு விழுங்கினாள்.

"ருக்மிணி என்ன இன்னும் அடையாளம் தெரியவில்லையா? இன்னும் சந்தேகமா?"

"இல்லை, ஆத்திற்கு வாங்க, போவோம்" என்ருள்.

"நான் அங்கே வரவில்லை........"

ருக்மிணிக்கு ஏதோ மனதில் அடித்த மாதிரி இருந்தது.

"உன்னைப் பார்க்கத்தான் வந்தேன். இங்கே வா! ஆற்றங் கரைப் பக்கம் போவோம்" என்ருன்.

"சரி" என்ருள். சீமாவிற்கு இதில் சிறிது ஆச்சரியம்தான். வெகு துணிச்சல்காரி என்று பட்டது.

"ருக்மிணி உன்னிடம் ஒன்று கேட்கவேண்டும் கேட் பையோ?"

"சந்தேகமா?"

"பின் ஏன் எனக்குக் கடிதம் எழுதவில்லை......?"

"நினைத்தேன்......நீங்கள் என்னவாவது நினைச்சுப்பியளோ என்று பயம்."

"இப்படிப் பயப்பட்டா நான் சொன்னபடி எப்படி நடப்பாய்?"

"கட்டாயமாக நடக்கிறேன். சத்தியமாக நடக்கிறேன். சத்தியமாக......" என்று துடி துடித்துக்கொண்டு பேசினுள்.

"உன் மாமாவும் அப்பாவும் சண்டை பிடிச்சுருளே. அவர்கள் நம்மைக் கவனித்தார்களா? அவர்களுக்கு ஒரு புத்தி கற்பிக்க வேண்டும். நாம் இருவரும் அவாளுக்குத் தெரியாமல் எங்கேயாவது போய்விட வேண்டும். நீ என்னுடன் வருகிருயா? கட்டாயம் வருகிருயா? கையடித்துக் கொடு."

"வருகிறேன் சீ........." தன்னை யறியாமல் பழைய சிறு குழந்தை நினைவிலேயே முடிக்கப்போனுள். திடீரென்று கணவன் என்ற மரியாதை நினைவு அவளைக் குழப்பியடித்து விட்டது. கோபித்துக் கொள்ளுவாரோ, மரியாதைக் குறைவாகப் பேசியதற்கு என்ற நினைவில் விம்மினுள்.

விம்மலுடன் "மன்னியுங்கோ" என்ற வார்த்தை வெளி வந்தது.

சீமாவிற்கு ருக்மிணி தன்னை மறக்கவில்லை என்பதில் பரிபூரண ஆனந்தம்.

"ருக்மிணி நீ என்னைச் சீமா என்று கூப்பிட்டால்தான்......!" என்று அவள் சத்தியம் செய்வதற்கு எடுத்த கையைத் தனது கரத்தில் பற்றினன். அவள் கை எவ்வளவு மெதுவாக புஷ்பம் போல் இருக்கிறது. உள்ளத்தில் இருந்து ஏதோ ஒன்று, உடல் பூராவாப் பாய்வதுபோல் இருந்தது.

ருக்மிணியும் கரத்தை இழுக்கவில்லை. இழுக்க இயலாதபடி வலியிழந்தாள். கூச்சமும் நாணமும் முகத்தைச் சிவக்கச் செய்தன.

"நீங்கள் இப்படிக் கேட்டால்......"

"சொன்னல்தான்......"

"சீமா" என்று மெதுவாக அவன் காதுடன் காதுவைத்துக் கூறினுள்......அதரங்கள் என்றும் மலராத விதம் மலர்ந்தன.

சீமாவின் கரங்கள் அவள் இடையில் மெதுவாகச்சுருண்டன.

அவள் இடையிலிருந்த குடம் கைசோர்ந்து மணலுக்கு நழுவியது.

ருக்மிணி!......நான் சொன்னபடி கேட்பயோ?"

"இன்னும் சந்தேகமா......நீங்கள் கூப்பிடும் இடத்திற்கு வருகிறேன்."

அவள் கண்களில் ஒரு ஜோதி பிரகாசித்தது. ஒரு கொஞ்சுதலும் குழைவும் காணப்பட்டது.

ருக்மிணி அவனது மார்பில் சாய்ந்தாள்.

"ருக்மிணி நான் வந்ததாக எவருக்கும் தெரியக்கூடாது. உன் அப்பாவிற்குக்கூட......"

"ஆகட்டும்."

இருவரும் தழுவிக்கொண்டனர்.

பிரிய மனம் வரவில்லை. விலக மனம் வரவில்லை.

"ருக்மிணி!" என்றான்.

"சீமா" என்றாள்.

அவள் கரத்தில் முத்தமிட்டான்.

அவளைச் சுற்றி இருந்த கரங்களை மீட்டான்.

குழந்தை ருக்மிணி நாணத்தினால் தழுதழுத்த குரலில் மெதுவாக "நான்" என்றாள்.

சடக்கென்று சீமா விலக்கிக்கொண்டு "போய் வருகிறேன் கண்ணே" என்று வெகு வேகமாகச் சென்றான்.

ருக்மிணிக்குத் துக்கம் நெஞ்சை யடைத்தது. அவன் முதுகில் வைத்த கண் மாறாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். விம்மி விம்மி மூச்சு வந்து கொண்டிருந்தது.

ஆற்றின் அக்கரையை அடைந்ததும் சீமா திரும்பிப் பார்த்தான்.

ருக்மிணி அவன் இருந்த திக்கில் கும்பிட்டாள்.

ருக்மிணியின் நெஞ்சில் மறுபடியும் மேகம் கவிந்தது.

நடந்த கனவு மறைந்தது.

## III

ருக்மிணி கணவனுக்குக் கொடுத்த வாக்குத் தத்தத்தை மறக்கவில்லை. பெற்றோரிடம் கூறவில்லை. ஆனால் இயற்கை கூறாது விடவில்லை. ருக்மிணி தனது கணவனின் நினைவை மறவாத வண்ணம் இயற்கை கருணை புரிந்தது.

இரண்டு மாத காலங்களில் இயற்கையின் கோளாறுகள் அவள்மீது தோன்றலாயின. வீட்டிற்குத் தெரியாது.

பண்ணை ஐயர் திடுக்கிட்டுப் போய்விட்டார். சீமாவைப் பற்றி அவர் நினைக்கவே இல்லை. தனது குற்றம் என்று உள்ளம் கூறியது. க்ஷாத்திரத்தை எல்லாம் மகளின்மீது தாக்கினார். "யார் என்று சொல்? பயலைத் தொலைத்துவிடுகிறேன்" என்று

கர்ஜித்தார். இதற்குமேல் தாயாரின் பிடுங்கல் வேறு. ருக்மிணி ஒன்றிற்கும் பதில் சொல்லவில்லை. கணவன் இட்ட பணியை மறப்பாளா? அவர் வருவார்; கடிதம் எழுதுவார் என்ற நம்பிக்கை இருக்கும்போது.........

இரகசியம் என்பது சில விஷயங்களில் வெகு கஷ்டமான காரியம். ஊரில் மெதுவாகப் பரவியது. ஊர்ப்பேச்சிற்குக் கேட்பானேன். ஒன்றிற்குப் பத்தாகத் திரிந்தது. எந்த ஊர்க் குருவியோ போய் பரமேச்வர ஐயர் குடும்பத்திற்கும் கூறி விட்டது. பரமேச்வர ஐயருக்கு நெஞ்சில் அடித்த மாதிரி இருந்தது. ருக்மிணியின் மீது அவருக்கு உள்ளூர ஒரு பாசம் இருந்து வந்தது. முதலில் நம்ப முடியவில்லை. சமாசாரம் உண்மை என்ற பிறகு என்ன செய்ய முடியும்? சம்பந்தியின் மீதிருந்த க்ஷாத்திரத்தை எல்லாம் ருக்மிணியின்மீது சுமத்தியும், தம் மகனுக்கு நீண்ட கடிதம் எழுதிவிட்டார்.

சீமாவிற்கு முன்பு பணம் எடுத்துக்கொண்டு ருக்மிணியுடன் ஓடிப்போக வேண்டுமென்ற ஆசை, நம்பிக்கை இரண்டும் இருந்தன. இப்பொழுது அந்த நம்பிக்கையும் பறந்துபோய் விட்டது. தான் தான் குற்றவாளி என்று அப்பாவிடம் கூச்சமில்லாமல் எப்படிச் சொல்லுவது? மேலும் ருக்மிணியின்மீது பழிஏற்பட்டு விட்டதே. அவளை எப்படி ஊரார் அறியாமல் வைத்து வாழ்வது? சீமாவின் மனம் கலங்கியது.

இச்சமயம் ருக்மிணியிடம் இருந்து குழறிக் குழறி கண்ணீரால் நனைந்த ஒரு கடிதம் வந்தது. அவளைக் கூட்டிக்கொண்டு போய்விடவேண்டுமாம். முன்பு சொன்னபடி சீக்கிரம் வரவேணுமாம், அப்பா வையராளாம். வீடு நரகமாக இருக்காம். அப்பாவிடம் சொல்லவில்லையாம். குழந்தை ருக்மிணிக்கு என்ன நம்பிக்கை!

சீமாவிற்கு என்ன பதில் எழுதுவது என்று தெரியவில்லை. தைரியம் இல்லை. பேசாமல் இருந்துவிட்டான்.

ருக்மிணியைப்பற்றி இரவெல்லாம் நினைத்து அழுதான். கண்ணீர் விட்டான். அவ்வளவுதான்.

ஆனால் தகப்பனாரிடம் வேறு கலியாணம் செய்து கொள்ளப் போவதில்லை என்று எழுதத் தைரியம் இருந்தது. அப்பா இருக்குமிடத்திற்கும் சென்னைக்கும் வெகு தூரமல்லவா? அதனால்தான் தைரியமிருந்தது. மேல் படிப்பிற்கு அவசியம் 200 ரூ. வேண்டுமாம்......அந்தப் பொய் சொல்லியாவது......

ருக்மிணி கடிதத்தை எதிர்பார்த்தாள். அது எப்படி வரும்?... இந்த உள்ளூர ஏற்பட்ட மன உழைச்சலாலும், இருதய உடைவாலும் சீமா நிறுவிய இலட்சியம் உடைந்து போயிற்று.

அந்த அதிர்ச்சியில் மூளை குழம்பிவிட்டது.

"அவர் வந்துவிட்டாரா? சீமா வந்தாச்சோ?"

இதுதான் புலம்பல் இரவும் பகலும்.

அவளது குழம்பிய மனதில் "சென்னைக்கே அவரிடம் சென்றுவிட்டால்" என்று பட்டது.

பித்தத்தில்தான் மூளை கூர்மையாக வேலை செய்யும். இரவு எல்லோரும் படுத்த பிறகு அப்பாவின் பெட்டியைத் திறந்து பணத்தை எடுத்துக்கொண்டாள். அன்று சீமா விடியற்காலையில் சென்ற வண்டியில் போய்விட வேண்டும் என்ற திட்டம். பித்தத்தின் கதியை என்ன சொல்வது! நினைத்தபடி செய்துமுடித்தாள்.

வண்டி சாயங்காலம் சென்னையில் கொண்டுவந்து சேர்த்தது.

பிறகு......?

அவளுக்குத் தெரியவில்லை.

பித்தத்தின் வேகம் அதிகமாயிற்று.

"அவரைக் கண்டீர்களா? சீமாவிடம் கொண்டுவிடுங்கள்" இதுதான் வார்த்தைகள்.

சென்னையில் கேட்கவா வேண்டும்! அதிலும் ஒரு அழகிய சிறு பெண் அலங்கோலமாகப் போகும் பொழுது.

அவளைத் தொடர்ந்து காலிக்கூட்டம். முக்கால்வாசி சிறுவர்கள் கூடியது.

சில விடர்களும் தொடர்ந்தார்கள்.

ருக்மிணியும் ஏகாக்கிராந்தையாக அதே புலம்பலுடன் சென்றாள்.

சிலர் சிரித்தார்கள். சிலர் துக்கப்பட்டார்கள். சென்னை அவசரத்தில் வேறு என்ன செய்யமுடியும்? மற்றவர்களுடன் வருத்தத்துடன் பேசிக்கொண்டு சென்றார்கள்.

அன்று சீமாவிற்கு உதவிசெய்த குருட்டு விதி அவனை அங்கு கொண்டு தள்ளி, மறுபடியும் உதவி என்ற தனது விளையாட்டை ஆரம்பித்தது.

கூட்டத்தை விலக்கிக்கொண்டு அவளிடம் சென்று "ருக்மிணி" என்றான்.

"அவரைக் கண்டீர்களா? சீமாவிடம் கொண்டு விடுங்கள்" என்றாள்.

அவள் குரலில் ஒரு சோகம்—நம்பிக்கை யிழந்த சோகம்—தொனித்தது.

கண்களில் அவனைக் கண்டு கொண்டதாகக் குறிகள் ஒன்றும் தெரியவில்லை.

"என்ன, தெரியவில்லையா? என்ன ருக்மிணி நான்தான் வந்திருக்கிறேன்."

"அவரைக் கண்டீர்களா? சீமாவிடம் கொண்டு விடுங்கள்" என்றாள் மறுபடியும், குரலில் அதே தொனிப்பு.

அவளிடம் விவாதம் செய்யாமல் ஒரு வண்டி பிடித்து அவளை ஏற்றிக்கொண்டு சென்றான்; துக்கம் நெஞ்சை யடைத்துக் கொண்டது. என்ன மாறுதல்? கசங்கிய மலர்.

வண்டியில் போகும்போது மறுபடியும் "அவரைக் கண்டீர்களா? சீமாவிடம் கொண்டு விடுங்கள்" என்றாள்.

சீமாவிற்குப் பதில் பேச முடியவில்லை......

அவள் அவனைக் கண்டு கொண்டாளோ என்னவோ? எனக்குத் தெரியாது.

ஆனால் சீமா, பரமேச்வரய்யரிடமும் உலகத்தினர் முன்பும் ஆண்மையுடன் நடந்து கொண்டான்.

# கடிதம்

சிங்காரவேலு ஒரு இலக்கியகர்த்தா. வாழ்க்கையின் சிக்கல்களை வாழ்க்கையின் இலக்ஷியங்களை ஏன் வாழ்க்கையையே திறந்து காண்பிக்கும் ஜன்னல்கள்தான் சிறு கதைகள் என்றால், அவைகளுக்கு உதாரணம் சிங்காரவேலுவின் கதைகள்.

ஒரு நாளும் பேனாவை வைத்துக்கொண்டு கோனாகி விடுவோம் என்று அவர் கனவு காணவில்லை; ஆனால் பேனாவை வைத்துக்கொண்டு பிச்சை எடுக்க வேண்டும் என்று நினைக்கவும் இல்லை.

அவரது சிறு கதைகளைப் பொறுத்தவரை, சமூகம் நூற்றில் இன்னொருவராக மதித்தது. முக்கால்வாசிப் பெயருக்கு அழகு என்பது என்ன என்று தெரியாது. சிலருக்கு அழகாய் இருக்கிறது என்று முதலில் சொல்லுவதற்குத் தைரியமில்லை.

இந்தமாதிரி சமூகத்தினிடை சிங்காரவேலு உயிர் வாழ வேண்டுமென்றால், வாழ்க்கையை உண்ணாவிரதத்தில் கழிக்கச் சக்தி படைத்திருக்கவேண்டும். அல்லது ஏதாவது கருணைமிகுந்த தெய்வம் அட்சயபாத்திரம் ஒன்றைக் கொடுத்துவிட்டுப் போயிருக்க வேண்டும். இயற்கையின் சட்டத்தை மீறவும், தெய்வத்தின் கருணையைப் பெறவும் முடியாத இந்தக் கலிகாலத்தில் பிறந்ததைப்பற்றி, சிங்காரவேலு நொந்துகொள்வதில் பயனில்லை.

அவருடைய சமூகமாகவும், ரஸிகர்களாகவும் சில நண்பர்கள் இருந்தார்கள். அதனால் அவருக்குப் பசி என்ற கவலை ஏறக்குறைய இல்லை. ஏனென்றால் அவருடைய தேவைகள் வெகு கொஞ்சம். குடும்ப பாரம் கிடையாது. கனவு கண்டு கொண்டிருப்பதற்குப் போதிய அவகாசம்இருந்தாலும் அதை இலக்கியமாக வடிவெடுக்க வைக்கும்ஊக்கம் குறைந்து வர ஆரம்பித்தது.

புகழ் இல்லாமல் இலக்கிய கர்த்தா உயிர் வாழ முடியாது. முகஸ்துதி வேண்டாம். இல்லாததை நீங்கள் சொல்லி

விட வேண்டாம். செய்வது சரிதான்; நன்றாயிருக்கிறது என்று சொல்லவாவது வேண்டாமா? நேர்மையான புகழ் இலக்கிய கர்த்தாவிற்கு ஊக்க மளிக்கும் உணவு. இதைக் கொடுக்கக் கூடிய சக்தியற்ற கோழையான ஒரு சமூகத்திற்கு என்ன எழுதிக் கொட்ட வேண்டிய திருக்கிறது. இதில் வாழும் இரந்த கர்த்தா மன மிழந்து பாழாய்ப் போவான்: ஆனால் சிங்காரவேலு இப்படி நாசமாவதற்குக் கோழையல்ல. தைரியத்தினால் ஏற்பட்ட மனக் கசப்பு அவரை ஒன்றும் எழுத விடவில்லை.

சிங்காரம் சமூகத்தில் நம்பிக்கை வைத்த மனிதர். ஓடித் தளர்ந்த சிந்தனைகள் எல்லாம், ஈட்டி குத்தும் மாதிரி கதைகளைச் சிருஷ்டித்தன.

*　　　*　　　*

அன்று

எப்பொழுதும் போல் அந்தத் தனியறையில் பாயில் உட்கார்ந்து கொண்டு இருக்கிறார்.

வெற்றிலையை மென்று மென்று துப்பியாகி விட்டது.

என்ன செயற்கை ஊக்கம் கொடுத்தாலும், அந்தக் கதையைத் தொட முடியவில்லை.

ஏழு நாட்களாக இந்தக் கதிதான்.

கையிலிருந்த பேனாவையும் காகிதத்தையும் கீழே பொத்தென்று போட்டார்.

பின்புற மிருந்த தலையணையில் சாய்ந்து கொண்டு வெற்றிலைச் செல்லத்தைப் பக்கத்தில் இழுத்து வைத்துக்கொண்டு வெற்றிலை போட ஆரம்பித்தார்.

அதுவும் ஒரு கலை—அவருக்கு.

தெரு வாசல் படியில் யாரோ வருவது போல் காலடிச் சப்தம்.

“சிங்காரம்!” என்ற குரல்.

“சுந்தரமா? வா!”

அவருடைய நண்பர் சுந்தரம் வந்து பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு, "என்ன வெளியே போகலாமா? மணி ஐந்திருக்குமே!" என்றார்.

"வெற்றிலையைப் போடு"

"என்ன! இன்னும் கதையை முடிக்கவில்லையே! ஆரம்பம் வெகு ஜோராய் இருக்கிறது. சீக்கிரம் முடியுங்கள்."

"ஆமாம்! வேலையில்லை! எழுதித் தூக்கி நிறுத்துகிற அவசரம் ஒன்றுமில்லை. என்னடா, நல்ல கதையை ரஸிக்கிறதற்கு ஒரு பயலும் இல்லை. சும்மா எழுது எழுது என்றால்! நான் பகுத்தறிவற்ற குயில் இல்லை. எனக்கு நான் எழுதுவது சரி; நன்றாயிருக்கிறது என்று சொல்ல நான்கு பேர்கள் வேண்டும். சுற்றி ஒன்றுக்கு மற்ற கழுதைகளை வைத்துக் கொண்டு என்ன செய்கிறது?" என்றார் சிங்காரம்.

"ரஸிக்கிறதற்கு நாங்கள் எல்லாம் இல்லையா?" என்றான் சுந்தரம்.

"நீ எனது சிநேகிதன். உனக்கு என் மேல் பிரேமை, நான் என்ன எழுதினாலும் உனக்கு நன்றாகத்தான் தெரியும். மூன்றாவது மனிதன் எவனாவது இதுவரை என் கதை நன்றாக இருக்கிறதென்று சொல்லி இருக்கிறானா? அதிருக்கட்டு மப்பா! நான் கதை எழுதுகிறேனென்று எத்தனை பெயருக்குத் தெரியும்? வா, போகலாம்! கதை எழுதி......" என்று சொல்லி எழுந்து வெளியே புறப்படத் தயாரானார்.

மௌனமாகக் கையிலிருந்த புகையிலையை வாயில் போட்டுக் கொண்டு நண்பரும் எழுந்தார்.

அன்று பேச்சு எங்கு சுற்றியும் கடைசியில் இதில்தான் வந்து விழுந்து கொண்டு இருந்தது.

* * *

ஐந்தாறு நாட்கள் கழித்து; இரவு ஏழு மணி இருக்கும்.

சிங்காரவேலு தமது அறையில் உட்கார்ந்து ஏதோ வாசித்துக் கொண்டிருக்கிறார்.

அந்தக் கதை அதுவும் அப்படியே அறை குறையாகத் தான் கிடக்கிறது.

"ஸார் தபால்" என்ற சப்தம்.

சிங்காரவேலுவிற்குக் கடிதம் வருவது விதி விலக்கு. முக்கால் வாசி தவறுதலாக வேறு யாருக்காவது போக வேண்டிய கடிதம் இங்கு வந்து விடுவது உண்டு. துணைத் தபால் காரனாக இவரும் சிரமப்பட வேண்டியதிருக்கும்.

ஜன்னல் வழியாக விழுந்த கடிதத்தை எடுத்து விலாசத்தைக் கவனித்தார். அதில் ஒன்றும் தவறு இல்லை. விலாசம் சரியாகத்தான் இருக்கிறது. ஆனால் கையெழுத்து அவருக்கு அறிமுகமானதாக இல்லை. தபால் முத்திரை எப்பொழுதும் போல் ஒரே கருப்பு மயமாக இருந்தது.

பிரித்து வாசிக்கிறார்

விசாகப் பட்டி
10—9—33

இலக்கிய கர்த்தரான திரு. சிங்காரவேலு அவர்கள் திவ்விய சமூகத்திற்கு,

நான் பெரிய படிப்பாளி ஒன்றுமில்லை; ஆனால் கலையில் எனக்கு ஆர்வம் மிகுதியும் உண்டு.

தங்கள் சிறுகதைகளுக்கு ஈகராகத் தமிழ் இலக்கியத்திலேயே (எனக்கு ஆங்கிலத்திலும் சிறிது பயிற்சி உண்டு) பெரும்பான்மையாகக் கிடையாது என்று சொல்லுவேன். தங்கள் 'சாலாவின் சங்கடங்கள்' என்ற சிறு கதை வாழ்க்கையின் உயிர் பெய் ஓவியமாக இருக்கிறது.

அது ஒரு புதிய மனித உலகத்தையே திறந்து காண்பிக்கிறது. அதைப் பற்றிப் புகழ்வதற்கு, நானும் ஓரளவு எழுதும் பயிற்சி பெற்றவனாக இருந்தால், எனது உள்ளத்தில் தோன்றியதை அப்படியே எடுத்துரைப்பேன். ஆனால் அந்தோ அவ்வளவும் மூங்கையன் கண்ட கனவாகவே இருக்கின்றன. இன்னும் தங்கள் எண்ணிறந்த கதைகளை விடாது படித்து வந்தவர்களில் நானும் ஒருவன். இன்னும் புதிய கற்பனைகளை, கனவு

லோகங்களைச் சிருஷ்டிக்க இறைவன் தங்களுக்குப் போதிய சக்தி அருளுவாராக.

இப்படிக்குத்
தங்கள் விதேயன்
நாகப்பன்.

கடிதத்தை வாசித்ததும் முகம் மலர்ச்சியடைந்தது. உள்ளம் பூரிப்படைந்தது. குதூகலம் பிறந்தது. மறுமுறையும் வாசித்தார். இன்னொரு முறையும் வாசித்தார். அந்தக் கடிதம் அவருடைய ஒரு பெரிய தாபத்தைத் தீர்த்தது.

" நீ ஒருவன்தான். எண்ணிறந்தவர்களில் ஒருவனல்ல. சமூகத்தில் கொஞ்சம் நம்பிக்கை இருக்கத்தான் செய்கிறது.முழு மோசமில்லை" என்று தனக்குள் சொல்லிக் கொண்டார்.

கடிதத்தைச் சுந்தரத்திற்குக் காட்ட வேண்டுமென்ற ஆசை. ஆனால் அதில் என்னதான் இருக்கிறதோ? மறுபடியும் படிக்க ஆரம்பிக்கிறார். நாகப்பனுக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதவேண்டும் என்று நிச்சயித்தாகி விட்டது.

மறுபடியும் படிக்க வாரம்பித்த பிறகு மனது திடீரென்று மாறுகிறது. சில சில எழுத்துக்கள் தெரிந்த, அறிமுகமான யாரோ ஒருவரின் கையெழுத்து மாதிரித் தெரிகிறது. ஆமாம்! யாரோ நமக்குத் தெரிந்த பயலுடைய வேலைதான். பிறகு எனது விலாசம் விசாகப்பட்டிக்கு யார் கொண்டுபோய்க் கொடுக்கப் போகிறார்கள். இந்தப் புளுகு மூட்டையை என்னிடமா அவிழ்க்க வேண்டும்? சீச்சீ! முட்டாள்! கோழை! தைரியமிருந்தால், உண்மையில் ரஸித்தால் பகிரங்கமாகப் பத்திரிகைக்கு ஏன் எழுதக்கூடாது? அவன் ரஸித்தது என் சிநேகத்திற்குத்தான். சீ! இதை எழுதிவிட்டால் எனக்குத் திருப்தி, சாந்தி, எல்லாக் குட்டிச் சுவரும் வந்து விடுமென்று எண்ணியிருக்கும்! முட்டாள்! அவனும் இந்த சமூகத்தில் ஒரு ஜந்துதானே! இந்த முட்டாள் கூட்டத்திற்குக் கதை எழுதவேண்டுமாம்! கதை! அதைவிடக் கசையடி கொடுப்பேன். முட்டாள்கள்! தரித்திரக் கழுதைகள்! நாளைக்கு வரட்டும். கதை வேண்டுமாம் கதை!

இந்தப் பயல்கள் சாவகாசமே வேண்டாம். தொலைந்தால் தான் இந்தப் பீடை ஒழியும். உண்மைப் பற்றுதலைக் காண்பிக்கத் தைரியமில்லாத கோழைகள். கடிதம் எழுதினுனே கடிதம் 'என்னை முட்டாள் என்று நினைத்துக்கொண்டானே? சீச்சீ! முட்டாள்! அவனை என்ன சொல்ல? பெற்று வளர்த்த சமூகம் இப்படிப்பட்டது. இதற்காக எழுதாமலும் இருக்கிறதில்லை......

காகிதம் எரியும் நாற்றம் அறை முழுவதும் பரந்தது.

விளக்கும் கரிப் பிடித்து எரிந்து, எண்ணையற்றுச் சோர்ந்து மங்கிக்கொண்டே வந்தது. வெற்றிலைப் பெட்டியை எடுக்கும் சப்தம். சிங்காரம் வெற்றிலை போட்டுக்கொண்டார்.

விளக்கு அணைந்தது.

அவர் மனதில் புழுங்கிய தணலும் அவிந்தது.

அன்று அவர் வெகுநேரம் தூங்கவில்லை.

இந்த மாதிரி அசட்டுத் தனமான சமூகத்தை எப்படித் தூக்குவது?

கோழைத்தனம் பிறப்புரிமையாக இருக்கிற இந்தப் புழுக்களை மனிதர்கள் ஆக்குவது எப்படி?

இருள் இருந்தால்தானே ஒளி. ஒளி வராமல் போய் விடுமா?

அதுவரை காத்திருக்க வேண்டியதுதான். எத்தனை காலமோ?

ஒளி வரும் பொழுது நான் இருக்க வேண்டும் என்ற அவசியமுண்டா? எனது சிருஷ்டிகள் இருந்தால் போதும்.

# நன்மை பயக்குமெனின்

பூவையாப்பிள்ளை (முழுப் பெயர் பூமிநாதபிள்ளை) பேட்டையில் பெரிய லேவாதேவிக்காரர். மூன்று வருஷம் கொளும்பில் வியாபாரம் அவரை ஒரு தூக்குத் தூக்கியது. அத்துடன் ஒரு பத்துக்கோட்டை நிலம் ; நெல்விலை முன்பு உயர்ந்தபொழுது ஒரு தட்டு. இவைகளினால் சாலைத்தெரு முதலாளி என்று பெயர். தெய்வ பக்தி, உலக நடவடிக்கைகளைப் பொறுத்து கோவிலுக்குப் போதல், நீண்ட பூஜை முதலியன எல்லாம் உண்டு.

பக்கத்து வீட்டுச் சட்டைநாத பிள்ளை புஸ்தகப் புழு. இவருக்கு இருந்த சொத்து வகையறுக்களைப் புஸ்தகமாக மாற்றுவதில் நிபுணர். வீட்டிலேயே ஒரு புஸ்தகசாலை. கிடைக்காத புஸ்தகங்கள், வேண்டாத புஸ்தகங்கள், வேண்டிய புஸ்தகங்கள், பழைய பிரதிகள், அபூர்வ ஏடுகள் எல்லாம் இவர் வீட்டில் பார்க்கலாம். ஏதோ ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறார் நீண்ட காலமாக. அவர் புஸ்தகம் எழுதுவது வெகு காலமாக வெறும் சமாச்சாரமாக இருந்து பழங் கதையாக மாறி விட்டது. இவருக்கு உலகமே புஸ்தகம் ; அறம், பொருள், இன்பம், வீடு எல்லாம் அதுதான்.

இந்த இரண்டு பேர்களும் அத்தியந்த நண்பர்கள். சாயங்காலம் நான்கு மணி முதல் சட்டைநாதப் பிள்ளை பூவையாப் பிள்ளையின் பேச்சு இன்பத்தை நாடுவார். இருவரும் வெளியே உலாவி வருவார்கள். இதுதான் இவர்கள் சந்திக்கும் நேரம். பணத்தைப் புஸ்தகமாக மாற்றும் சட்டைநாத பிள்ளை, தமது நண்பரிடம் கடன் வாங்கி யிருந்தார் என்றால் அதிசயமல்ல. கொஞ்சம் நாளாகிவிட்டது.

சட்டைநாத பிள்ளை தனது புஸ்தகக் கூட்டத்தில் அளவளாவிக் கொண்டிருக்கிறார். அவருடைய பெண் தங்கம் ஒரு காகிதத் துண்டைக் கொண்டு வந்து கொடுத்து "மேல வீட்டுப் பெரியப்பா குடுத்தாஹ" என்றாள்.

"உயர் திரு அண்ணாச்சி அவர்களுக்கு, நம்ம விஷயத்தைக் கொஞ்சம் தாங்கள் துரிசாப் பார்க்கணும். இன்று சாயங்காலம் மேற்படி விஷயத்திற்கு வருவேன். மறக்கப்படாது.

இப்படிக்குத் தங்கள்,
உயிர் நண்பன்
பூவையாப் பிள்ளை."

என்று வாசித்தார்.

"சரி. அண்ணாச்சிக்கு நாம் கொஞ்சம் பணம் கொடுக்கணும். நெருக்கிருஹ. ஏட்டி நீ சவுந்திரத்தை அனுப்பு" என்று சொல்லி விட்டார்.

கொடுக்க வேண்டியது 500ரூ. அதிகமாக 200ரூ சேர்த்துப் பாங்கிற்குச் செக் எழுதியாகி விட்டது. எதற்கு? எல்லாம் புஸ்தகத்திற்குத்தான்.

"ஏலே! சவுந்தரம், இதைப்போய் மாத்திக்கிட்டு சுறுக்காவா. மணி பதினொண்ணு ஆயிட்டுதே! போ! போ!" என்று சொல்லிவிட்டுக் கையிலிருந்த 'சொந்த அவஸ்தா' முதல் பாகத்தில் தன்னை மறந்து விட்டார்.

ஒருமணி நேரம் கழிந்தது. சவுந்திரமும் வந்து விட்டான்.

எல்லாம் 100ரூ. நோட்டுக்கள். சட்டைநாத பிள்ளை தன்னை மறந்தவராக இருந்தாலும் ஒவ்வொரு காரியத்தையும் நுணுக்கமாகச் செய்பவர். வந்த நோட்டுக்கள் நம்பரை எல்லாம் குறித்துக் கொண்டார். அப்பொழுது ஜரத்துஷ்டிரனுடைய மொழிகளில்தான் மனம். அதை யோசித்துக் கொண்டே ஐந்திற்குப் பதிலாக ஆறு நோட்டுக்களை எடுத்துக் கொண்டு பூவையாப் பிள்ளையைப் பார்க்கச் சென்றார்.

பூமிநாத பிள்ளையின் பூஜை முடியும் சமயம்.

"அண்ணாச்சி வரணும், வரணும். ஏது இந்தப் பக்கமே காணமே. ஒரு நிமிட்" என்று பூஜையின் 'கியரை' மாற்றி வேகத்தை அதிகப்படுத்தினார். "மந்திரமாவது நீறு, துதிக்கப் படுவது நீறு இத்யாதி, இத்யாதி; முற்றிற்று; திருச்சிற்றம்

பலம்'' என்று முடித்துவிட்டு, ''என்ன அண்ணச்சி? என்ன விசேஷம்'' என்றார்.

''ஒண்ணுமில்லை. அந்த விசயத்தை முடுச்சிக் கிடலாம் என்று வந்தேன்.''

''ஏது நம்ம துண்டில் ஏதும் மனத்தாங்கலாக எழுதிட்டேனா?''

''அதொண்ணு மில்லே. கையிலிருக்கப்ப குடுத்திடலாமென்று நினைச்சேன். எனக்குத்தான் மறதியாச்சே'' என்று நோட்டுப் பொட்டணத்தைக் கையில் கொடுத்தார். அவர் பிரித்துப் பார்ப்பதுபோல் கவனித்துவிட்டு மடியில் வைத்துக் கொண்டார்.

''சரியாப் பாருங்க.''

'அதுக்கென்ன! எல்லா மிருக்கும்! எங்க போகுது?'

'அண்ணச்சி நம்மகிட்ட ஒரு விசயமில்லா?'......

'சொல்லுங்க......'

'நம்ம பையன் பீ ஏ தானே?'

'தன் பெண்ணுக்கு வரன் தேடுகிறாரோ' என்று நினைத்தார் பூவையாப் பிள்ளை.

'ஆமாம் தங்கத்திற்கு வயதுதான் வந்து விட்டதே. எல்லாம் நாளும் கிழமையும் வந்தா முடியும். அதுக்கென்ன விசாரம்' என்றார் பூவையாப் பிள்ளை.

'அதில்லே அண்ணச்சி. அவுஹ காலேசிலே ஒரு புஸ்தகம் இருக்கிறது. நான் எழுதும் புஸ்தகத்திற்கு அது கட்டாயம் எனக்கு வேண்டியது. எங்கேயும் கிடைக்காது. அவனை எடுத்து வரச் சொல்லுங்க. பிறகு, காணமற் போய் விட்டதென்று விலையைக் கொடுத்து விடுவோம்' என்றார்.

'இம்பிட்டுத்தானே! ஏலே! அய்யா! நடராசாவை எங்கே?'

'நீங்க அவனைப் புஸ்தகத்தை மாத்திரம் எடுத்து வரச் சொல்லுங்க. அவனுக்குத் தெரியாது சின்னப் பையன்.'

நடராஜன் வந்தான்.

"அண்ணாச்சிக்கு ஏதோ புஸ்தகம் வேணுமாம். எடுத்துக் கொண்ணாந்து குடு."

பெயர் எல்லாம் எழுதிக் கொடுத்துப் பையனை அனுப்பியாகி விட்டது.

"பொறவு, நான் போயிட்டு வாரேன்."

"என்ன அதுக்குள்ளே! வெத்திலே போடுங்க, நம்ம சவுந்தரம் இருக்கானே அவன் ஒரு 100 ரூபா வாங்கினான். இப்போ அப்போ என்கிறான். நீங்க கொஞ்சம் பார்க்கணும்."

"நான் கண்டிக்கிறேன். அந்த மாதிரி இருக்கலாமா? போயிட்டு வாரேன்" என்று விடை பெற்றுக் கொண்டார்.

பூவையாப் பிள்ளை பணத்தைப் பெட்டியில் வைத்துப் பூட்டுமுன் எண்ணினார். அதிகமாக இருந்தது. கொண்டுபோய்க் கொடுத்து விடலாமே என்று நினைத்தார். "அவராக வரட்டுமே; என்ன இவ்வளவு கவலை ஈனம்" என்று நினைத்துப் பெட்டியில் வைத்துப் பூட்டினார்.

அன்று முழுவதும் சட்டைநாதப் பிள்ளை வரவில்லை. இரண்டு நாள் பார்த்துக் கொண்டு பாங்கிக்கு அனுப்பலாம் என்று நினைத்துச் சும்மாயிருந்தார்.

சாயங்காலம் நடராஜன் புஸ்தகத்தைக் கொண்டு வந்தான். பிள்ளையவர்கள் அதைக்கொண்டு கொடுத்துப் பேசிக் கொண்டிருக்கும்பொழுது, அதைப் பற்றிப் பேசவில்லை.

## II

இரண்டு நாளாயிற்று.

சட்டைநாத பிள்ளைக்குப் புஸ்தகம் வாங்கப் பணம் தேவையாக இருந்தது. பெட்டியைத் திறந்து பார்த்தார். ஒரு நூறு ரூபாய் நோட்டுத்தான் இருந்தது. ஒருவேளை தவறுதலாகக் கொடுத்து விட்டோமோ வென்று பூவையாப் பிள்ளையிடம் சென்றார். கேட்டவுடன் அவர் வெகு சாந்தமாக "இல்லையே"

என்று சொன்னவுடன் வீட்டில் வந்து எங்கும் தேடினார். பணத்தைக் காணோம் என்று வீட்டில் ஒரே அமளி; களேபாரம்.

ஒன்றும் தெரியவில்லை.

பாங்க் காஷியரிடம் சென்று நம்பர்களைக் குறித்துக்கொடுத்து வந்தால் சொல்லும்படி தெரிவித்துவிட்டு வந்தார்.

அன்று சாயங்காலம் காஷியர் அவர்கள், பூவையாப் பிள்ளை செலுத்திய 600 ரூபாயில், இவர் கொடுத்த ஆறு நம்பரும் இருக்கின்றன என்று தெரிவித்துச் சென்றார்.

முதலில் சட்டைநாத பிள்ளை திடுக்கிட்டுவிட்டார். இருந்தாலும் பணத்தாசை யாரைவிட்டது என்று நினைத்துக்கொண்டு, வெகு கோபமாகப் பூவையாப் பிள்ளை வீட்டிற்குச் சென்றார்.

"என்ன அண்ணாச்சி? நீங்க இப்படி இருப்பிஹ என்று நினைக்கவேயில்லை. நீங்க குடுத்த ஆறுநூறு ரூபாயில் எனது ஆறு நம்பர்களும் இருக்கிறது என்று காஷியர் பிள்ளை இப்பத்தான் சொல்லிவிட்டுப் போனார். நீங்கள் இப்படிச் செய்யலாமா...?" என்று அடுக்கிக்கொண்டே போனார். ஸ்வரம் ஏறிக்கொண்டே போயிற்று.

பூவையாப் பிள்ளைக்குத் தூக்கிவாரிப் போட்டுவிட்டது. அகப்பட்டுக்கொண்டோம், மானம் என்றெல்லாம் ஒரு நிமிஷம் மனம் கொந்தளித்தது. திடீரென்று ஒரு யோசனை, வழிபட்ட தெய்வந்தான் காப்பாற்றியது.

"சவுந்திரம் மத்தியானந்தான் அவன் கடனுக்கு நீங்க உதவி செய்ததாகக் கொடுத்துவிட்டுப் போனான். அதற்கென்ன?"

"அப்படியா திருட்டு ராஸ்கல். சவத்துப் பயலே என்ன செய்கிறேன் பாருங்கள்! நம்ம இடையில் சண்டை உண்டாக்கிவிட்டானே" என்று இரைந்துகொண்டு வீட்டிற்கு ஓடினார்.

சவுந்திரம், 'கண்ணாணை' 'தெய்வத்தாணை' எல்லாம் பலிக்கவில்லை. வேலை போய்விட்டது.

"நீ நாசமாய்ப் போகணும்" என்று ஒரு கைப்பிடி மண்ணை அள்ளிவிட்டுப் போகும்பொழுது, தான் கொடுக்கவேண்டிய,

தாங்கமுடியாத பாரமாகிய கடன் சுமை தெய்வச் செயலாகத் தீர்ந்துவிட்டதை எண்ணவேயில்லை. என்ன நன்றிகெட்ட உலகம் !

## III

ஒரு வாரமாகிவிட்டது.

புஸ்தகத்தைத் திருப்பிக் கொடுக்கவேண்டும்.

நடராஜன் சட்டைநாதப் பிள்ளையை நாடிச் சென்றான்.

" மாப்பிள்ளை வாருங்கோ " சட்டைநாத பிள்ளை நடராஜனை எப்பொழுதும் இப்படித்தான் கூப்பிடுவார் ; அதுவும் தனியாக இருக்கும்பொழுது.

" அந்தப் புஸ்தகம் வேண்டுமே நாளாகிவிட்டது."

" அதைத்தான் சொல்லவந்தேன், புஸ்தகத்தை இங்குதான் வைத்திருந்தேன். காணவில்லை. பயப்படாதே ; விலையைக் கொடுத்துவிடுவோம். சவுந்திரம் பயல் திருடி இருப்பானோ என்று சந்தேகம் " என்று சொல்லிக்கொண்டே உள்ளே சென்றார்.

நடராஜன் திடுக்கிட்டுவிட்டான். இப்படியும் அப்படியும் உலாவிக்கொண்டிருக்கும்பொழுது அந்தப் புஸ்தகம் கண்ணில் பட்டது. ஆச்சரியம், திகில், கோபம்.

" இந்தாருங்கள் 20 ரூபா இருக்கிறது. கேட்டவிலையைக் கொடுத்துவிடுங்கள் " என்று சிரித்துக்கொண்டே நீட்டினார்.

" புஸ்தகம் அதோ இருக்கிறதே ?"

சட்டைநாத பிள்ளை திடுக்கிட்டார்.

பிறகு சமாளித்துக்கொண்டு, " என்ன மாப்பிள்ளை ! அந்தப் புஸ்தகம் கிடைக்காதது. விலையைக் கொடுத்துவிடுங்கள். நான் எழுதும் புஸ்தகம் அவ்வளவு முக்கியம். அது இல்லாவிட்டால் நடக்காது. உங்களுக்குத் தெரியாததா ?"

" அது திருட்டுத்தனம். என்னால் முடியாது."

"நான் புஸ்தகத்தைக் கொடுக்க முடியாது. உம்மால் இயன்றதைப் பாரும்."

"என்ன இது அதிகப்பிரசங்கித்தனமாக இருக்கிறது! புஸ்தகத்தைக் கொடுமென்றால்......"

"அதைக் கொடுக்க முடியாது......"

"இதோ ரூபா இருக்கிறது. எடுத்துக்கொண்டு போம். நான் அண்ணாச்சியிடம் பேசிக்கொள்ளுகிறேன்."

"அண்ணாச்சியாவது, ஆட்டுக் குட்டியாவது? புஸ்தகத்தைக் கொடும் என்றால்......"

வார்த்தை அதிகப்பட்டது. ஏக வசனமாக மாறியது.

"அப்பா அதைத்தான் கொடுத்துவிடுங்களேன்" என்றது. தழுதழுத்த குரல் கதவு இடையிலிருந்து.

கண்கள் மாத்திரம் நடராஜன் மனதில் பதிகிறது. தங்கம் தான்! என்ன தங்கம்! மனதிற்குள், "இவனுக்கா இந்தப் பெண்" என்ற நினைப்பு.

"போ கழுதை உள்ளே. உன்னை யார் கூப்பிட்டது? நியாயம் சொல்ல வந்தாயாக்கும்! போ நாயே!"

நடராஜன் கோபமாகத் தகப்பனாரிடம் சென்றான்.

"என்ன அப்பா இப்படிச் செய்கிறீரே?"

"அதற்கென்ன செல்லலாம்? நீ எப்படியாவது முடித்துவிடு. வீண் சச்சரவு வேண்டாம். உனக்கு உலகம் தெரியவில்லையே!"

"திருட்டுத்தனமல்லவா?"

"திருட்டுத்தனம்தான். யார் இல்லையென்று சொன்னது? எனக்காக முடித்துவிடு."

"நீங்களும் இப்படிச் சொல்லலாமா? அவர் பெண்ணுக்கு இருக்கிற புத்திகூட......"

கண்களுக்குப்பின் நின்ற முழுஉருவம் எப்படியிருக்குமென்று நினைத்துக்கொண்டே காரியத்தைச் சரிப்படுத்தச் சென்றான்.

---

# வழி

அன்று அலமுவுக்குத் தூக்கம் வரவில்லை. நினைவுகள் குவிந்தன. சொல்ல முடியாத சோகம் நெஞ்சையடைத்தது. மனக்குரங்கு கட்டுக் கடங்காமல் ஓடியது.

அவளருகில் இருந்த ஒற்றை விளக்கைச் சற்றுத் தூண்டினாள். உடல் வியர்க்கிறது. தேகம் என்னமோ ஒரு மாதிரியாக, சொல்ல முடியாதபடி தவித்தது.

அவள் விதவை. நினைவு ஐந்து வருஷங்களுக்கு முன்பு ஓடியது. ஒரு வருஷம் சென்றது தெரியாதபடி, வாழ்க்கை இன்பத்தின் முன்னொளி போலத் துரிதமாகச் சென்றது. பிறகு அந்த நான்கு வருஷங்களும், பிணிவாய்ப்பட்ட கணவனின் சிச்ருஷை என்ற தியாகத்தில், வாழ்க்கையின் முன்னொளி செவ்வானமாக மாறி, வைதவ்யம் என்ற வாழ்க்கை அந்தகாரத்தைக் கொண்டுவந்தது.

அன்று முதல் இன்றுவரை வாழ்க்கையென்பது நான் சங்கிலி. கணவன் தேகவியோகச் சடங்குகள் சம்பிரதாயம் துக்கத்தைத் தந்தாலும் பொழுதையாவது போக்கிற்று, அப்படிச் சென்றது ஒரு வருஷம்.

அன்று அவர் இறந்த பதினாறு நாட்களும் இவளைப் பிணம் போல் அழும் யந்திரமாகக் கிடத்திச் சுற்றியிருந்து அழுதார்கள். அவள் உயிர்ப் பிணம் என்ற கருத்தை உணர்த்தவோ!

அலமி பணக்காரப் பெண்தான். பாங்கியில் ரொக்கமாக ரூ. 20,000 இருக்கிறது. என்ன இருந்தாலும் இல்வாழ்க்கை அந்தகாரம்தானே? அவள் நிலை உணவு இருந்தும் உண்ண முடியாது இருப்பவள் நிலை.

அவளுக்குத் தாயார் கிடையாது. தகப்பனார்; அவர் ஒரு புஸ்தகப் புழு. உலகம் தெரியாது. அவருக்கு வாழ்க்கை

இன்பங்கள் புஸ்தகமும் பிரசங்கமும். சிலசமயம் அலமுலையும், அழைத்துச் சென்றிருக்கிறார்.

மரண தண்டனை அனுபவிக்கும் ஒருவன் சார்ளி சாப்ளின் சினிமாவை அநுபவிக்க முடியுமா? வைதவ்ய விலங்குகளைப் பூட்டிவிட்டுச் சுவாரஸ்யமான பிரசங்கத்தைக் கேள் என்றால் அர்த்தமற்ற வார்த்தையல்லா அது!

அன்று அவளுக்குத் தூக்கம் வரவில்லை. துக்கம் நெஞ்சை யடைத்தது. தொண்டையிலே ஏதோ ஒரு கட்டி அடைத்திருப்பது மாதிரி உணர்ச்சி. உதடுகள் அழவேண்டுமென்று துடித்தன.

உறக்கம் வரவில்லை. எழுந்து முந்தானையால் முகத்தின் வியர்வையைத் துடைத்துக்கொண்டு, வெளியிலிருந்த நிலா முற்றத்திற்கு வருகிறாள்.

வானம் அத்யந்தமும் கவ்விய இருட்டு. உயர இலட்சியங்களை அசட்டுத்தனமாக வாரி இறைத்தது மாதிரி கண் சிமிட்டும் நட்சத்திரங்கள். அவளுக்கு அவை சிரிப்பதுபோல், தன்னைப் பார்த்துச் சிரிப்பதுபோல் குத்தியது. மணி பன்னிரண்டாவது இருக்கும். இந்த இருட்டைப்போல உள்ளமற்றிருந்தால் தேகமற்றிருந்தால் என்ன சுகமாக இருக்கும்!

இந்த வெள்ளைக்காரன் ஒரு முட்டாள். 'சதி'யை நிறுத்தி விட்டதாகப் பெருமையடித்துக் கொள்ளுகிறான். அதை இந்த முட்டாள் ஜனங்கள் படித்துவிட்டுப் பேத்துகிறது. முதலில் கொஞ்சம் பிறகு...வெள்ளைக்காரன் புண்ணியத்தால் வாழ்க்கை முழுவதும் சதியை, நெருப்பின் தகிப்பை அநுபவிக்க வேண்டியிருக்கிறதே. வைதவ்யம் என்றால் என்ன என்று அவனுக்குத் தெரியுமா? ஒவ்வொரு நிமிஷமும் நெருப்பாகத் தகிக்கும் சதியல்லவா வைதவ்யம்......

அவர் இருந்திருந்தால்......அதை நினைத்தவுடன் மனம் ஐந்தாறு வருஷங்களைத் தாண்டிச் சென்றுவிட்டது. பழைய நினைவுகள், எட்டாத கனவுகள் அவற்றில் முளைக்க ஆரம்பித்தன. அவள் உடல் படபடத்தது. நெஞ்சில் சண்டமாருதமாக, பேய்க்கூத்தாக எண்ணங்கள் ஒன்றோடொன்று மோதின.

எதிரே விசாலத்தின் வீடு. இன்னும் தூங்கவில்லையா அவளுக்கென்ன மகராஜி. கொடுத்து வைத்தவள்.

அப்பொழுது, "கட்டிக் கரும்பே தேனே......" என்ற பாட்டு, கிராமபோன் ஓலம். பாட்டு, கீழ்த்தரமான சுவையுடைய பாட்டுத்தான்.

அன்று அவளுக்கு மூண்டெழுந்த தீயிலே எண்ணை வார்த்தது போல் இருந்தது. அவளுக்குப் பாட்டு இனிமையாக இருந்தது. கேட்பதற்கு நாணமாக இருந்தது. இருட்டில் அவள் முகம் சிவந்தது. இனி, இப்படி யாராவது அவளை யழைக்கமுடியுமா?

இவ்வளவிற்கும் காரணம் இயற்கையின் தேவை. 'தேவை யென்று பெரிய எழுத்துக்களில்.

இதிலே ஒரு முரட்டுத் தைரியம் பிறந்தது. ஏன் அந்தக் கோடித் தெருச் சீர்திருத்தக்காரர் திரு. குகன் சொல்லியது மாதிரி செய்தால் என்ன? அப்பாவிடம் சொல்ல முடியுமா? அவர் அன்னியன். மேலும்......நான் விதவை என்று தெரியும். போனால் அவருக்குத் தெரியாதா?

திரு. குகன் செய்த பிரசங்கத்தின் வித்து வேகமாகத் தழைத்து ஆட்சி செய்ய ஆரம்பித்தது. நினைத்தபடி நடக்க ஹிந்துப் பெண்களுக்குத் தெரியாது. 'இயற்கையின் தேவை' யென்ற ஈட்டி முனையில் அவள் என்னதான் செய்ய முடியாது? மேலும் தாயார் இருந்தால் ஒரு ஆறுதல், கண்காணிப்பு இருந்திருக்கும். இதுவரை தனக்கு வேண்டியதை அவளே செய்து கொண்டவள். அவளுக்குக் கேட்டுச் செய்ய ஆள் கிடையாது. மனம் சீர்திருத்தவாதியை அணுகிவிட்டால் உலகமே மோட்ச சாம்ராஜ்யமாகிவிடும் என்று சொல்லுகிறது. சீ, போயும் போயும் மூளையில்லாமல் ஆண்பிள்ளையிடம் போய் என்ன கத்தரிக்காய்க் கடையா, வியாபாரம் பண்ண? அவளுக்குச் சீர்திருத்தவாதி உள்பட இந்த உலகம் எல்லாவற்றையும் கொன்று, துடிப்பதைப் பார்க்கவேண்டுமென்று படுகிறது. சீ! பாபம். உலகமாவது, மண்ணாங்கட்டியாவது! நெருப்பில் போட்டுப் பொசுக்கட்டுமே. மார்பு வெடித்து விடுவதுபோலத் துடிக்கிறது. இருளில் கண்ட சுகம் அந்தச் சங்கீத ஓலத்தில் போய்விட்டது. அவளுக்கு விசாலத்தின்மீது ஒரு காரணமற்ற வெறுப்பு. அவளையும் அவள்

புருஷன், கிராமபோன் எல்லாவற்றையும் நாசம் செய்யவேண்டு மென்று படுகிறது. காதைப் பொத்திக்கொண்டு உள்ளே வந்து படுக்கையில் பொத்தென்று விழுகிருள்.

அசட்டுத்தனமாக, தலையணைக் கடியில் வைத்திருந்த கொத்துச் சாவியில் இருந்த முள்வாங்கி முனை விர் என்று மார்பில் நுழைந்துவிட்டது.

அம்மாடி......

உடனே பிடுங்கிவிடுகிருள். இரத்தம் சிற்ருேடைபோல் பீறிட்டுக்கொண்டு வருகிறது. முதலில் பயம். அலமி இரத்தத் தைப் பார்த்ததில்லை. அதனுல் பயம். ஆனுல் இத்தனை நேரம் நெஞ்சின்மீது வைக்கப்பட்டிருந்த பாராங்கல் எடுக்கப்பட்ட மாதிரி ஒரு சுகம். இரத்தம் வெளிவருவதிலே பரம ஆனந்தம். அதையே இமைகொட்டாமல் பார்த்துக்கொண்டிருக்கிருள். இரத்தம் பிரவாகமாகப் பொங்கி மேலுடைகளை நனைக்கிறது. இரத்தத்தின் பிசுபிசுப்புத் தொந்தரவாக இருந்ததனுல் மேலு டையை எடுத்துவிட்டாள். இரத்தம் வெளிப்படுவதில் என்ன சுகம். நேரமாக நேரமாக, பலம் குன்றுகிறது. "அவரிடம் போவதற்கு என் உயிருக்கு ஒரு சின்னத் துவாரம் செய்து வைத்திருக்கிறேன், இன்னும கொஞ்ச நேரத்தில் போய்விடும்! ஏன் போகாது? போனுல் இந்த உடல் தொந்தரவு இருக்காது...

அலமுவின் தகப்பனுர் புஸ்தகப் புழு. அன்று வெகுநேர மாயிற்றுக் கையிலிருந்த புஸ்தகத்தை முடிக்க. முடித்துப் போட்டுவிட்டு, வெறந்தாவிற்கு வந்தார். அலமுவின் அறையில் வெளிச்சம் தெரிகிறது. "இன்னும் தூங்கவில்லையா?" உள்ளே சென்றுர்.

என்ன......

அலமு மார்பில் இரத்தமா! அவள் ஏன் இம்மாதிரி அதைச் சிரித்தவண்ணம் பார்த்துக்கொண்டு இருக்கிருள்.

"அலமு! நெஞ்சில் என்னடி!" என்று கத்திக்கொண்டு நெருங்கினுர்.

"நெஞ்சின் பாரம் போகச் சின்ன வாசல்" என்றாள் ஹீன ஸ்வரத்தில். குரல் தாழ்ந்திருந்தாலும் அதில் கலக்கமில்லை, வலியினால் ஏற்படும் துன்பத்தின் தொனி இல்லை.

"இரத்தத்தைத் நிறுத்துகிறேன்" என்று நெஞ்சில் கையை வைக்கப்போனார்.

"மூச்சு விடும் வழியை அடைக்கவேண்டாம்" என்று கையைத் தள்ளிவிட்டாள்.

பைத்தியமா?

"இரத்தம் வருகிறதேடி!" என்று கதறினார்.

"இந்த இரத்தத்தை அந்தப் பிரம்மாவின் மூஞ்சியில் பூசிடுங்கோ! வழியை அடைக்காதீர்கள்" என்றாள்.

தலை கீழே விழுந்துவிட்டது.

பிரம்மாவின் மூஞ்சியில் வாரியடிக்கவேண்டும், நியாயமும் சமூக தர்மமும் இருக்கும்போது!

# தனி ஒருவனுக்கு

அம்மாசிச் சாம்பான் பிறப்பில் பிச்சைக்காரன் அல்ல. இவன் பிறந்த மூன்றாவது மாதத்திலேயே இவனுடைய தகப்பனை பாவாடை காலமாகி விட்டான். வீட்டிலிருந்த சொத்தை (கலப்பை முதலியன) சின்னக் கடன் விஷயங்களுக்கு, சேரி பாபத்திலும், பண்ணை சுப்பராயப் பிள்ளை பற்றிலுமாகப் பறி முதல் செய்யப்பட்டது.

இவனுடைய வளர்ச்சிப் படலத்தைப் பற்றிய பிள்ளைத் தமிழ் யாரும் எழுதி வைக்காமல் போய் விட்டதால், இருபது வயது வருமட்டிமுள்ள சரித்திரக் குறிப்புகள் கிடைக்கவில்லை. கொஞ்சநாள் பண்ணையில் வேலை பார்த்து வந்ததாகவும் தெரிகிறது. பிள்ளையவர்கள் மனமுவந்து கொடுத்த சிறிய கடன் தொகையைக் கொண்டு கலியாணமும் நடந்தது. நடந்த மூன்றாம் மாதம் இவன் தாய் பரகதி-பறையருக்குப் பரகதி யடைய உரிமை யுண்டோ என்னவோ, செத்துப் போய் விட்டாள்.

என்ன காரணத்தாலோ இவனது பெண்டாட்டியும் தாய் வீடு நோக்கிக் கம்பி நீட்டி விட்டாள். ஆக இம்மாதிரித் தொல்லைகளால் பழைய கடனும் கொடுக்க முடியாமல் புதிய கடனும் வாங்க மார்க்கமில்லாமல் இருக்கும்பொழுது ஒரு ரஸவாத பண்டிதர்--சாமியார்—அங்கே வந்து சேர்ந்தார்.

சாமியாருக்கும் அம்மாசிக்கும் எப்படியோ பழக்கம் ஏற்பட்டது, கேட்பானேன்; பிள்ளையவர்கள் வீட்டுப் பித்தளைச் செம்புப் பாத்திரங்களில் கை வைத்தால், அவ்வளவையும் சுவர்ணமாக்கித் தந்து விடுவதாகச், சுவாமியார் வாக்களித்தார்.

தொல்லை தீர வழியிருக்கும்பொழுது, தர்ம சாஸ்திரமா குறுக்கே நிற்க முடியும்? பண்ணைப் பிள்ளையவர்களின் பாத்திரங்கள், ஊருக்குப் பக்கத்திலிருந்த பாழ் மண்டபத்திற்கு வந்து விட்டன, ஸ்புடம் போட்டுத் தங்கமாக்கிவிட. இதற்குள்

பிள்ளையவர்களுக்கு எப்படியோ தெரிந்துவிட, "பயலை அப்படியே புடம் போட்டு விடுகிறேன் பார்" என்று இரைந்து கொண்டு பண்ணை ஆட்களைத் திரட்டி வந்தார்.

கூட்டத்தைத் தூரத்தில் கண்டவுடன், அந்தர்த்தியானமாவது தவிர வேறு வழியில்லை என்று கண்ட சாமியார் நடையைத் தட்டி விட்டார். அம்மாசியைக் கையும் களவுமாகப் பிடித்துக் கொண்டார்கள். அன்று பட்ட நரக வேதனைக்குமேல் ஆறுமாத கடுங்காவல்.

சில சந்தர்ப்பங்களில் சிறைவாசம் ஒரு புகழைக் கொடுக்கும். சமுதாயத்தில் ஒரு மகத்தான ஸ்தானத்தைக் கொடுக்கும். அம்மாசியின் சிறைவாசம் அந்த ரகத்தைச் சேர்ந்ததல்ல.

சிறையை விட்டு வெளியேறியவுடன் அம்மாசி சொந்த ஊருக்குச் செல்லவில்லை. நியாயத்தின் முடிவைக் கண்டு பிடித்த அந்த மகான் இருக்கும் திருப்பதிக்கு—இந்த சண்டாளன்; இந்த பதிதன், இந்த சமூகத் துரோகி, புழு, செல்ல முடியுமா?

விலை சரசமான காவிக்கட்டி இருக்கும்பொழுது சோற்றுக்குப் பஞ்சமா என்று பட்டது. உடனே அம்மாசிச் சாம்பான், ஏழை அமாவாசைப் பரதேசியானூர்.

தாயுமானவரையும் குதம்பைச் சித்தரையும் தப்பும் தவறுமாக உச்சரிக்க எங்குதான் கற்றுக் கொண்டாரோ? முதலில் பக்கத்து ஊரில் முகாம் போட்டார், வீட்டுக்கு முன் வந்து நின்றால் இரண்டில் ஒன்று தீர்மானமாகத் தெரிந்தா லொழியப் போவதில்லை.

கொஞ்ச நாள் கவலையற்ற சாப்பாடு.

## 2

ஒரு மாதத்திற்கு முன்தான், ஏழை அம்மாவாசி சுவாமியாரின் வழியாக இறந்து போன தாயுமானவர் கடவுளின் பரிபூரணானந்தத்தை எங்கள் ஊர்த் தெரு வழியாக வாரி இறைத்துக் கொண்டிருந்தார். ஊரைக் கவர்ச்சிக்கும்படி ஒன்றும் செய்யவில்லை. நூற்றியோராவது பிச்சைக்காரனாகத்தான் கவலையற்ற

சாப்பாடு. எங்களூர்ப் பாழ் மண்டபத்தில் கவலையற்ற நித்திரை, ஸ்வானுபூதி.

இதற்குள் யாரோ சுவாமியாரின் பூர்வாசிரம ரகசியத்தை யறிந்து ஊர் பூராவும் பரப்பி விட்டார்கள். உளவு பார்க்க வந்த வன் என்ற தங்கள் கொள்கையையும் சேர்த்துக் கட்டி விட்ட தினால், எங்களூர்க் காரர்கள் மதிப்பில் சுவாமியார் பதவியி லிருந்து திருட்டுப் பேர்வழி என்ற ஸ்தானத்திற்கு இறங்கி விட் டார். பரி மறுபடியும் நரியாவது திருவிளையாடல் காலத்துக் காரர்களுக்கு மட்டுந்தானா உரிமை?

இவ்வளவும் ஒரே நாளில்; இது சுவாமியார்—பாவம்—அவ ருக்குத் தெரியாது.

வழக்கம்போல் கப்பறையுடன் "அங்கிங்கெனாதபடி எங் கும் பிரகாசமான பொருளைத் தேடி" எங்களூர்க் காரருக்குத் தெரியப்படுத்தத் தெருக் கோடியில் வருமுன்னமே, அவரைச் சூழ்ந்து ஒரு பெரிய கூட்டம் கூடிவிட்டது.

ஏசலும், இரைச்சலும் சுவாமியாருக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. அவரும் காதுள்ள, சாதாரண அறிவுள்ள மனிதன் தானே! பூர்வாசிரமக் கதைதான் இந்த விபத்திற்குக் காரணம் என்று தெரிந்து கொண்டார். தெரிந்து என்ன செய்கிறது? அதற்குள்தான் மரத்துடன் வைத்துக் கட்டியாகி விட்டதே.

தர்மத்தின் காப்பாளர்களும், நீதியின் பொக்கிஷங்களுமான பெரியார்கள் நிறைந்த இந்தக் கிராதக யுகத்து எங்களூர் வாசி கள், இம்மாதிரியான மோசத்தையும் புரட்டையும் பொறுத் திருப்பார்களா? நியாயத்தைப் பரிமாறுவதற்காகக் கருட புரா ணத்தைப் பாராயணம் செய்த, ஹிந்து தர்மத்தின் மெய்க்காப் பாளர்களான எங்களூர்ப் பெரியார்கள், அதற்குத் தகுந்த மகத் தான ஒரு மன நிலையைத் திருப்தி செய்தார்கள்.

இந்தத் 'திருத்தொண்டினால்' சுவாமியாரை எளிதில் கண்டு பிடிக்க முடியாது போய் விட்டது. காலில் பலத்த காயம். முகத்தில், முதுகில் புளியம்விளார்களின் முத்தத்தினால் உண் டான இரத்தம் உறைந்த நீண்ட வரைகள். உடம்பு முகம் முழுதும் ஒரே வீக்கம்.

"பயம் இருக்கட்டும். உன்னை ஜெயிலுக்கு அனுப்பாமல், மன்னிக்கிறோம். ஓடிப்போ," என்று தங்கள் தயாள சிந்தனையைச் சுவாமியாருக்கு எடுத்துக்காட்டி, ஊருக்கு வெளியே பிடித்து நெட்டித் தள்ளிவிட்டார்கள். சுவாமியாருக்கு அந்தப் பாழ்மண்டபத்தை யடைவதற்குள், மோக்ஷமோ நரகமோ இரண்டிலொன்றிற்குப் போய்விட்டுப் பத்துத் தடவை திரும்பி விடலாம் என்று தோன்றிற்று.

இதற்குமேல் எங்களூரில் கவந்தப் படலத்தை நடத்தலாம் என்ற நம்பிக்கை அவருக்கு இருக்குமானால், அவரைப் பைத்தியக்காரன் என்று சொல்லிவிடலாம். சுவாமியார் அப்படி ஒன்றும் நினைக்கவில்லை. ஆனால், இந்த ஊரைவிட்டுப் போவதற்கும் தான் இவ்வூர் மஹாஜனங்களின் அன்பின் திருத்தொண்டின் மூலமாகக் காண்பித்து, அவரை அங்கிருந்து அகலாமலிருக்கும்படி செய்து விட்டார்களே.

அந்தப் பாழ்மண்டபம் எப்படி இருந்தாலும், வேளைக்கு வேளை உணவும் மருந்தும் கொடுக்கும் ஜெனரல் ஆஸ்பத்திரி அல்ல, மூன்று நாட்கள் அவர் இருந்த ஸ்திதியில் அங்கு இருந்தால், வலுவில் சுமத்தப்பட்ட உண்ணாவிரதம்தான் நிச்சயம்.

காய்ச்சல், வலி, பசி தாகம் இவைகளின் கூத்துப் பொறுக்க முடியவில்லை. சற்றுத் தூரத்திலுள்ள கோபுரங்களிலும், மரக்கிளைகளிலும், சுவாமியாரின் இறுதியை எதிர்பார்த்து, அவரைத் தங்கள் வயிற்றில் சமாதியடையச் செய்ய, காக்கைகளும் கழுகுகளும் காத்திருந்தன. அவைகளும் இவரைத் தீண்டாத பறையன் பதிதன் என்று நினைத்தோ என்னவோ, கிட்டவே நெருங்கவில்லை.

ஊருக்கு வெளியிலே, அந்தப் பாழ்மண்டபத்தின் பக்கத்தில் தான் ஒரு சுடலைமாடன் பீடம். ஊரின் காவல் தெய்வம் என்ற கௌரவத்துடன், நமது அரசாங்கத்துடன் கூட்டுறவு செய்து கொண்டு, வரிவாங்கும் தொல்லைகள் எல்லாம் அற்ற ஒரு மௌன அரசாட்சி நடத்திக் கொண்டிருந்தது. அதைப்பற்றிக் கதைகள் பல.

எங்களூர் மறவர்களுக்கு 'பிஸினஸ் டல் ஸீஸனில்' சுடலை மாடன் பாடு கொண்டாட்டம்தான். தினம் திருவிழா. நாலு பணத்தைக் கண்டால் சுடலைக்குப் படைப்பு என்ற சம்பிர தாயத்தை வைத்துக்கொண்டு, குடித்துக் களிப்பார்கள்.

அன்று சின்னச்சாமித் தேவனுக்குப் படைப்புப்போட வேண்டும் என்று தோன்றிற்று. கேட்பானேன்; சாயங்காலம் முதல் ஒற்றைப் பறைமேளம் ஒன்று சுடலை மாடனுடைய கேட்காத திருச்செவிகளுக்குச் சங்கீதக் கச்சேரி நடத்தியது.

படைப்புக்குரிய பொங்கல்; பக்கத்து மரத்தடியில் சின்ன சாமித்தேவன் மனைவியின் கண்காணிப்பில் தயாராகிக் கொண் டிருந்தது. மாடனைச் சுற்றித் தேவரும், அவருடைய நண்பர்களும் பூசாரியும்தான்.

இரவு பத்துமணியாகி விட்டது. பானையும் அடுப்பிலிருந்து இறங்கி 'சாம்போர்' என்று அவர்கள் உச்சரிப்பில் மரியாதை பெறும் குழம்புடன் கலந்து, சுடலையின் திருச்சேவையை எதிர் பார்த்து நின்றது.

பூசாரி சுடலையின் பாட்டைப்பாடி ஆராதனை நடத்துகிறான். தேவரின் மனைவியும் சுடலையின் அருள்பெறச் சன்னிதிக்குச் சென்றுவிட்டாள்.

இருளிலே ஒரு உருவம் நகர்ந்து நகர்ந்து சோற்றுப் பானையை அணுகுகிறது, சுவாமியார்தான், பசியின் தனியரசிற்கு முன் எந்தச்சுடலைமாடன்தான் எதிர்க்க முடியும்? வாரி வாரி ஆத்திரத்துடன் கொதிக்கும் சோற்றை வாயில் திணிக்கிறார். அவ்வளவுதான், ஒரு கவளத்திலே இவருடைய இவ்வுலக ஆசை நிறைவேறியது.

சற்றுத் தூரத்திலிருந்த சுடலை பக்தர்கள் இவர் ஒரு கவளம் எடுக்கும்போதே கண்டு தடுக்க ஓடிவந்தார்கள். கிட்ட நெருங் கியதும் தண்டிப்பதற்குச் சுவாமியாரின் பிணம்தான் கிடந்தது. "மாடனின் சக்தி" "அருள்" என்று வியந்தார்கள். "பறப் பயலுக்கு வேண்டும்" என்றார்கள். இதையெல்லாம் கேட்க ஏழை அம்மாவாசைச் சாமியாருக்குக் கொடுத்து வைக்கவில்லை

சுடலையின் சக்திக்காக அன்று இரட்டிப்புப் பூசை.

3

ஊரில் கொஞ்சம் பரபரப்புத்தான். சுடலையின் சக்தி வெளியாகும்பொழுது இல்லாமலா இருக்கும்?

திடீரென்று இறந்தவனை அறுத்துச் சோதனை செய்யாமல், போலீஸ் விசாரணையில்லாமல் புதைத்துவிட முடியுமா? எங்களூர் டாக்டரும் இன்ஸ்பெக்டரும் தேசபக்தர்கள் அல்ல; ஆனால் கிழக்கு மேற்காக இரண்டரைப் பர்லாங்கும், தென் வடலாக ஒன்றரைப் பர்லாங்கும் விஸ்தீரணமுள்ள எங்களூர் நிலப்பரப்பைப் பொறுத்தமட்டில் தேசபக்தர்கள் தான். வீண் ஆர்ப்பாட்டம் செய்து ஊரைக் கெடுக்க வேண்டாம் என்று, பட்டினியால் இறந்தான் என்ற முடிவிற்கு வந்தார்கள்.

பிறகு என்ன? புதைக்க வேண்டியதுதான் பாக்கி.

எங்களூர் ஆஸ்பத்திரித் தோட்டி இந்த மாதிரி பிணங்களைப் புதைத்து விடுவதில் சமர்த்தன். ஒருவனே முடித்துவிடுவான். ஒற்றைக்கம்பில் பிணத்தை இறுக்கிக் கட்டவேண்டியது—தலை சற்றுத் தொங்கினால் என்ன மானம் போய்விட்டது? மேலே மண்வெட்டியைச் சொருக வேண்டியது; விறகுக் கட்டைபோல் தலையில் தூக்கிக்கொண்டு போய்ப் புதைக்க வேண்டியது. இது தான் அவனுக்குத் தெரியும். அதில் அவன் "எக்ஸ்பர்ட்."

அன்று சாயங்காலம்; அதாவது பிணத்தை அறுத்துச் சோதித்த அன்று சாயங்காலம்:

அப்பொழுது எங்களூர் கோகலே ஹாலில் "பாரத ஜனங்களின் தற்கால நிலைமை" என்ற பிரசங்கம். ஊர் பூராவாகவும் திரண்டு இருந்தது; அதைக் கேட்க அவ்வளவு உற்சாகம். முதலிலே 'பாரத சமுதாயம் வாழ்கவே' என்ற பாட்டை ஒரு நண்பர் வெகு உருக்கமாகப் பாடினார்.

"தனி யொருவனுக்கு உணவில்லையெனின், ஜகத்தினை யழித்திடுவோம்" என்ற அடிகள் வந்தவுடன், என்ன உருக்கம்! என்ன கனிவு! நாங்கள் ஆனந்த பரவசத்தில் கைதட்டினோம்!

# புதிய நந்தன்

நந்தா சாம்பானை நந்த நாயனாராக்க, சிதம்பரத்தில் அக்கினிப்புடம் போட்ட பின்னர் வெகு காலம் சென்றது.

அந்தப் பெருமையிலேயே ஆதனூர் சந்தோஷ—அல்லது துக்க—சாகரத்தில் மூழ்கி அப்படியே மெய் மறந்தது.

இங்கிலீஷ் சாம்ராஜ்யம் வந்த சங்கதி கூடத் தெரியாது. அப்படிப்பட்ட நெடுந் தூக்கம்.

இப்பொழுது, ஆதனூரிலே ரயில்வே ஸ்டேஷன் வெற்றிலை பாக்குக் கடை என்ற ஷாப்பு; காப்பி ஹோட்டல் என்ற இத்யாதி சின்னங்கள் வந்து விட்டன. எப்படி வந்தன என்ற சமாசாரம் யாருக்கும் தெரியாது.

ஆனால், நந்தன் பறைச் சேரியில் விடை பெற்றுக்கொண்ட பிறகு, பறைச் சேரிக்கு என்னமோ, கதி மோட்சம் கிடையாது. பழைய பறைச்சேரிதான். பழைய கள்ளுக்கடை தான். ஆனால் இப்பொழுது பழைய வேதியரின் வழி வழி வந்த புதிய வேதியரின், ஆள் மூலம் குத்தகை. சேரிக்குப் புறம்பாக அல்லது தீண்டக் கூடாது என்ற கருத்துடனோ, மரியாதையான தூரத்திலே, ஒரு முனிஸிபல் விளக்கு. அதை ஏற்றுவதைப் பற்றி ஒருவருக்கும் தெரியாது. சேரிப் பறையர்கள் ஆண்டையின் அடிமைகள், அத்துடன் அவர்களுக்குத் தெரியாத வெள்ளைத் துரைகளின் அடிமைகள்.

அந்தப் பழைய வேதியரின் வாழையடி வாழையாக வந்த (அவர்கள் குல முறை கிளத்துப் படலம் எந்தப் புராணத்திலும் இல்லை) வேதியர் அக்கிரகாரத்தில் பெரிய பண்ணை. 1000 வேலி நிலம் இத்யாதி வகையறா. இது மட்டுமல்ல. ஒரு பென்ஷன் பெற்ற ஸப் ரிஜிஸ்திரார் விஸ்வநாத ச்ரௌதி: இவருக்குப் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலும், இறந்து போன ஸனாதன

உண்மைகளிலும் அபார நம்பிக்கை. இதை யறிந்து நடப்பவர்கள் தான் அவருடைய பக்தர்கள்.

அவருக்கு ஒரு பையன், பெயர் ராமநாதன். எம். ஏ. படித்து விட்டு கலெக்டர் பரிக்ஷை கொடுக்க விருந்தவன். ஏதோ பைத்தியக்காரத் தனத்தினுல்—இது அவர்கள் வீட்டிலும் அக்ரகாரத்திலும் உள்ள கொள்கை - சத்தியாக் கிரகத்தில் ஈடுபட்டு விட்டான். பையனுக்கு இதிலிருந்த பிரேமையை ஒரு நல்ல சம்பந்தத்தில் ஒழித்து விடலாம் என்பது சிரௌதியின் நம்பிக்கை. பிள்ளையின் பேரிலிருந்த அபார வாத்ஸல்யத்தின் பயன்.

2

சேரியிலே கருப்பன் ஒரு கிழட்டு நடைப்பிணம். 60 வயது. பெரிய நயினாரின் தோட்டக்காவல். இதில் ஒரு ஸ்வாரஸ்யம். கருப்பன் சிறு பிராயத்தில் தெரியாத் தனத்தினுலோ, ஐயரவர்கள் இப்பொழுதும் சொல்லிக் கொண்டிருக்கிறபடி, 'பறக்கிறது'னுலோ, ஒரு நாள் இரவு, அக்ரஹாரத்தில் இருக்கும் தெப்பக் குளத்தில் இறங்கி ஒரு கை தண்ணீர் அள்ளிக் குடித்து விட்டான். கோயில் தெய்வத்தின் உலாவுப் பிரதிநிதியான சுப்பு சாஸ்திரிகள் கண்டு விட்டார். அக்ரஹாரத்தில் ஏக அமளி. அப்பொழுது சிறுவனுக விருந்த விஸ்வநாத ச்ரௌதி, தன்னை மீறிய கோபத்தில் அடித்த அடி கருப்பனைக் குருடாக்கியது. விளையும் பயிர் முளையிலே தெரியாதா ?

ஆனல் ச்ரௌதி இளகிய மனம் உடையவர். கருப்பனுடைய ஸ்திதிக்கு மிகவும் பரிதபித்து தோட்டத்தில் காவல் தொழிலைக் கொடுத்தார். கல்யாணம் செய்து வைத்தார். தோட்டத்திலே குடிசை கட்டிக் கொடுத்தார். பிறகு தங்கக் கம்பியாகி விட்டான் என்று எல்லோரிடத்திலும் சொல்லுவதில் வெகு பிரேமை.

3

அதெல்லாம் பழைய கதை.

கருப்பன் குருடனுகி விட்டால் குழந்தைகள் பிறக்காதா ? முதலில் ஒரு ஆண் குழந்தை. அவன் பெயர் பாவாடை. ஆண்டை சின்னசாமியும் ஏறக்குறைய இதே காலத்தில் தான் பிறந்தான்.

இராமநாதன் சில சமயங்களில் தோட்டக் காட்டிற்கு வரும் பொழுது பாவாடையுடன் கேணியில் முக்குளித்து விளையாடுவதி லும் மரக் குரங்கு விளையாடுவதிலும் பரம உத்ஸாகம்.

அதெல்லாம் பழைய கதை.

இரண்டு பேரும் வித்தியாசமான இரண்டு சமூகப் படி களின் வழியாகச் சென்றார்கள். இரண்டு விதமாகக் கண்டார்கள்.

பரமண்டலங்களிலிருக்கும் பிதாவாகிய கர்த்தரின் நீதிகளை, ஆதனூரில் பரப்பும்படி ரெவரெண்ட் ஜான் ஐயர் ஒரு தடவை ஆதனூர் சேரிக்கு வந்தார். பாவாடையின் புத்தி விசேஷத்தைக் கண்டு அவனைத் தம் மதத்தில் சேர்க்க அனுமதித்து விட்டால், பெரிய பண்ணை மாதிரி ஆக்கி விடுவதாக ஆசை காட்டினார். கருப்பனுக்கு, தன்மகன், "இங்குருசி" (English) படிக்க வேண்டு மென்று ஆசை. நீட்டுவானேன்? பாவாடை ஜான் ஐயருடன் சென்றான்.

ரெவரெண்ட் ஜான் ஐயர் வேளாளக் கிருஸ்தவர். முதலில் போர்டிங்கில் போட்டுப் படிக்க வைத்தார். பையன் புத்தி விசேஷம், மிகுந்த பெயருடன் 10 கிளாஸ் படிக்கும்வரை பிரகா சித்தது. இன்னும் பிரகாசிக்கும். பரமண்டலங்களிலிருக்கும் கர்த்தரின் விதி வேறு விதமாக இருந்தது.

ஜான் ஐயருக்கு ஒரு பெண் உண்டு. மேரிலில்லி என்ற பெயர். நல்ல அழகு.

அவளும் அந்த மிஷன் பள்ளிக்கூடத்தில் ஆண் பிள்ளைகளு டன் படித்தாள். எல்லாவற்றிலும் முதல் மார்க் எடுக்கும், பாவாடையிடம் (இப்பொழுது அவனுக்கு தானியேல் ஜான் என்ற பெயர்) சிறிது பிரியம் நட்பு, வரவரக் காதலாக மாறியது.

கிருஸ்தவ சமுதாயத்தில் இந்துக் கொடுமைகள் இல்லை யென்று ஜான் ஐயர் போதித்ததை நம்பி, மனப்பால் குடித்த ஜான் தானியேல், ஒரு நாள் ஐயரிடம் நேரிலேயே தன் கருத்தை வெளியிட்டான்.

ஜான் ஐயரவர்களுக்கு வந்து விட்டது பெரிய கோபம். "பறக் கழுதை வீட்டை விட்டு வெளியே இறங்கு" என்று கழுத்தைப் பிடித்து நெட்டித் தள்ளினார்.

மனமுடைந்த தானியேலுக்குப் பாழ் வெளியாகத் தோன்றியது உலகம். இந்த மன நிலைக்கு மதம் தானே சாந்தி என்கிறார்கள். கிருஸ்தவனாக இருந்தபொழுது வேத புத்தகத்தை நன்றாகப் படித்திருந்தான். சுவாமியாராகப் போய்விட வேண்டுமென்று கத்தோலிக் மதத்தைத் தழுவி, சுவாமியார் பரிட்சைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நாவிஸ் பிரதராக (Novice Brother) Father ஞானப் பிரகாசம் மேற்பார்த்த மடத்தில் இரண்டு வருஷங்கள் கழித்தான். சுற்றி நடக்கும் அபத்தங்களும், சில சுவாமியார்களின் இயற்கைக்கு விரோதமான இச்சைகளும், மனதிற்குச் சற்றும் சாந்தி தராத இருப்புச் சட்டம் போன்ற கொள்கைகளும் அவன் மனத்தில் உலகக் கட்டுப்பாடே ஒரு பெரிய புரட்டு, என்ற நம்பிக்கைகளைக் கிளப்பி விட்டன.

அதனிடமும் விடை பெற்றுக் கொண்டு, திரு. ராமசாமிப் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபட்டு விட்டான். அதிலே அவன் ஒரு பெரும் தீவிரவாதி. இப்பொழுது தோழர் நரசிங்கம் என்ற பெயருடன், தனக்குத் தோன்றிய உண்மைகளை அதில் ஒரு பைத்தியம் பிடித்தது போல், பிரசாரம் செய்து கொண்டு வந்தான்.

ஒரு தடவை தகப்பனாரைக் காண ஆதனூருக்கு வந்தான். பழைய எண்ணங்கள் குவிந்திருக்கலாம், அதைப் பற்றி எனக்குத் தெரியாது. அவனுக்கு இரண்டு உண்மைகள் தெரிந்தன. தனக்கும் தனது குடும்பத்தினருக்கும் இடையே எண்ணங்களில், செய்கைகளில், ஏன் எல்லாவற்றிலுமே ஒரு பெரிய பிளவு இருக்கிறது என்பது ஒன்று. இன்னும் ஒன்று தான் சென்ற பிறகு, தனக்கு ஒரு அழகான — பறைச்சிகளுக்கும் அழகாயிருக்க உரிமையுண்டு—தங்கை, பதினாறு பிராயத்தாள் இருப்பதை யறிந்ததுதான்.

ஆனால், இவர்களை மனிதரின் நிலைமைக்குக் கொண்டு வர எந்தப் பகீரதன் உண்டாகப் போகிறானோ என்ற மலைப்பு ஏற்

பட்டு விட்டது. தனது பிரசங்கங்கள் படித்தவர்களிடத்தில் செல்லும்; இந்த வாயில்லாப் பூச்சிகளிடத்தில்?

4

ராமநாதன் வீட்டில் செல்லப் பிள்ளை. இட்டது சட்டம். பக்கத்து ஜில்லாத் தலை நகரில் மெட்ரிக்குலேஷன் வரை படித்தான். அவனுடைய படிப்பு வேறு ஒரு தினுஸு. கெட்டிக்காரன்; பள்ளிக்கூடத்தில் மட்டுமல்ல. சிலரைப் போல் பள்ளிக்கூடத்தில் மூழ்கி விடவில்லை. காலத்தின் சக்தி வசப்பட்டு அதன் நூதன உணர்ச்சிகளில் ஈடுபட்டு இன்பப்பட்டவன்.

சென்னைக்குச் சென்று மேல்ப் படிப்புப் படித்தான்; எம். ஏ. வரையில். அதற்குள் 1930 இயக்கம் வந்தது. தந்தை நினைத்த கலெக்டர் பதவியை விட்டு, தடியடிபட்டு ஜெயிலுக்குச் சென்றான்.

ஜெயிலில் இருந்து வந்ததும் ஹரிஜன இயக்கத்தில் ஈடுபட்டான். தகப்பனாருக்கு வருத்தம் தான். ராமநாதனின் அசையாத மனத்தின் முன் ச்ரௌதியின் அன்பு தான் நின்றது. கொள்கைகள் பறந்தன.

ஒரு தடவை ஆதனூருக்கு வந்திருந்தான். அப்பொழுது கருப்பனின் மகளுக்கு வயது வந்து விட்டது. நல்ல இயற்கையின் பூரண கிருபை இருந்தது.

ஒரு நாள் இரவு நல்ல நிலா. தோட்டத்திற்குச் சென்றான். இரவு கொஞ்ச நேரந்தான். அதுவும் ஆதனூரில் கேட்க வேண்டுமா?

தோட்டக் கிணற்றில் யாரோ குதிப்பது போல் சப்தம். ஓடிப் பார்க்கிறான்; ஒரு பெண் உள்ளே, அவனுக்கு ஒன்றும் தெரியவில்லை. உடனே அவனும் குதித்தான்.

"சாமி, கிட்ட வராதிங்க, பறச்சி, கருப்பன் மவ. சும்மா நீச்சிங் குளிக்கறேன்" என்ற குரல்.

"சரி சரி, நீ விழுந்து விட்டா யாக்கும் என்று நினைத்தேன். ஏறி வா" என்று கரை ஏறினான்.

"இல்லே, சாமி" என்று தயங்கினுள். பிறகு என்ன? இயற்கை இருவரையும் வென்றது.

ராமநாதனுக்கு,...பிறகு ஒரு மகத்தான பாபம் செய்து விட்டோம் என்ற நினைப்பு. கருப்பன் மகளுக்கு, சின்னப் பண்ணையின் தயவு கிடைத்ததில் திருப்தி.

ராமநாதன் அவளைக் கலியாணம் செய்து கொள்வதாக வாக்களித்தான். 'அதெப்படி முடியும் சாமி' என்று சிரித்தாள்.

கருப்பனிடம் போய் நடந்ததைச் சொல்லிப் பெண்ணைக் கொடுக்கும்படி கேட்டான். அவனுக்குப் புதிய கொள்கைகள் எப்படித் தெரியும்?

"அது நயினுரே மகாப் பாவம். கண்ணுலே அப்படிச் செய்யக் கூடாது."

ராமநாதனுக்கு இடி விழுந்தது போலாயிற்று.

5

மகாத்மா காந்தி தென்னுட்டில் ஹரிஜன இயக்கத்திற் காகப் பிரசாரம் செய்ய வந்தார். ஆதனூரில் ஐந்து நிமிஷம் தங்குதல். எல்லாம் ராமநாதனின் ஏற்பாடு. ச்ரௌதிகள் அவ ருடன் வாதம் செய்ய புராண அத்தாட்சிகளுடன் தயார். இதில் ச்ரௌதிகளுக்கு இரட்டை வெற்றி என்ற நம்பிக்கை. ஒன்று. காந்தியின் கொள்கையைத் தகர்ப்பது. இரண்டாவது காந்தியின் முன்பே தன் புத்திரனிடம் சனுதனத்தின் புனிதத்தைக் காண்பிப்பது.

தோழர் நரசிங்கம் காந்தியை எதிர்த்துக் கேள்விகள் கேட்க ஆதனூருக்கு வந்தான். தங்கையின் சமாசாரம் தெரிந்து விட் டது. தகப்பனுரிடம் கலியாணம் செய்து வைத்துவிட வேண்டு மென்றும், அதற்குப் பறையரின் சமூதாயத்தின் கட்டுப்பாட் டால் செய்ய முடியும் என்றும் தெரிவித்தான். தகப்பனுரின் முட்டாள்தனமான நம்பிக்கையைத் தகர்க்க முடியவில்லே. 'பாப்பானின் சாயத்தைத் துலக்கி விடுகிறேன்' என்று காத் திருந்தான்.

ரயில்வே ஸ்டேஷன் பக்கத்திலிருந்த மைதானத்தில், ஒரு மேடை; லியாஸ்லேட்; இத்தியாதி, இத்தியாதி, பெருங் கூட்டம். வெற்றி கொள்ள ஆசைப்படும் சனுதனமும் அதில் கலந்திருக்கிறது.

கருப்பன் கிழவன், 'மவாத்துமா' கிழவரைப் பார்க்க ஆசை. கண் ஏது? அதென்னமோ? குருடருக்கு என்ன செய்ய முடியுமோ?

தட்டுத் தடுமாறிக் கொண்டு வந்தான். எங்கோ தன் மகன் சப்தம் போல் இருக்கிறது என்று தடுமாறிக் கொண்டு ஓடினுன்.

மாலைகள் வந்து விட்டனவா என்று கவனித்து ஓடிக் கொண்டிருக்கும் ராமநாதன் சற்றுப் பின்னல் வந்தான். குறுக்குப் பாதை வழியாகத் தோழர் நரசிங்கம் எங்கிருந்தோ வந்து கொண்டிருந்தான்.

நெற்றிக் கண்ணைத் திறந்த சிவபிரான் போல் தலைப்பு வெளிச்சத்தைப் போட்டுக் கொண்டு கோஷித்துக் கொண்டு வருகிறது மதராஸ் மெயில். ஆதனூர் அதன் மரியாதைக்குக் குறைந்தது; நிற்காது. நாற்பது மைல் வேகம்.

என்ஜின் டிரைவர் விஸிலே ஊதுகிருன்; கோஷிக்கிருன். குருடன் கம்பி வழியாகவே கடக்கிருன். மனம் குழம்பி விட்டதா?

தூரத்திலிருந்து இருவர் அவனைக் கண்டு விட்டார்கள், மகனும் மருமகனும்; இயற்கைச் சட்டத்தின்படி அப்படித் தான். சமுதாயம் என்ன வேண்டுமானுலும் சொல்லிக் கொள்ளட்டும்.

வேகமாக ஓடி வருகின்றனர்.

வெளிச்சம்; வெளிச்சம்.

மூவரும் சேரும் சமயம். இழுத்து விடலாம்.

"ஐயோ!"

ஊதம், ரத்தக் களரி,

மூவரின் இரத்தங்கள் ஒன்ருய்க் கலந்தன, ஒன்ருய்த்தான் இருக்கின்றன.

இதில் யாரை நந்தன் என்பது?

புதிய ஒளியை இருவர் கண்டனர். இருவிதமாகக் கண்டனர்.

இறந்த பிறகாவது சாந்தியாமா?

சமுதாயத்திற்குப் பலிதான். அதை யார் நினைக்கிருர்கள்.

பத்திரிகையில் பெரிய நீண்ட செய்திகள்......

பிறகு ஆதனூரில்......?

# பறிமுதல்

43 நெ. கைதி ஒரு பயங்கரப் புரட்சிக்காரன். அவன் பேரில் அரசியல் விஷயமாகக் கொலைக் குற்றம் சாட்டப்பட்டுக் கோர்ட்டில் விசாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

பயங்கரப் புரட்சிக்காரன் என்று சமுதாயத்தின் சார்பாக அரசாங்கம் முடிவு கட்டி விட்டது. ஆனால் அவனைப் பார்த்தால் அப்படித் தோன்றாது. இயற்கைச் சிருஷ்டியில் வசீகரப்படுத்தும் ஒரு ஜீவன் இருந்தால் அது 43 நெ. கைதி.

அவன் இருக்கும் அறை தனி. வெளிச்சம் வருவதற்காக அல்லாமல் காற்று வருவதற்கு மட்டும் ஒரு சிறிய துவாரம். அதன் வழியாகப் பெரிய பூனை நுழையலாம். ஆனால் புரட்சிக்காரர்கள் பூனை வடிவம் எடுக்கக்கூடுமென்று பயந்தோ என்னவோ, அதிலும் இரும்புக் கம்பி.

இந்தத் தனிமையில் ஒருவனுக்குப் பித்துப் பிடிக்காமல் இருந்தால், அவன் மன உறுதியை என்னவென்று கூறுவது!

வாரத்திற்கு ஒரு முறை (தவறுதலாகவோ என்னவோ) அவனது சிநேகிதியைப் பார்க்க அனுமதித்தார்கள். அதுதான் காரணம் அவன் அந்தச் சிறையிலிருந்து ஒரு அற்புதமான கிரந்தத்தை எழுத.

தூக்குத் தண்டனை அனுபவிக்க இன்னும் பதினைந்து நாட்கள். இன்னும் ஒரு முறை வருவாள். கிரந்தம் உலகத்திற்குப் போய்விடும். அதற்குமேல் சாந்தி. வேறு என்ன வேண்டும்?

அந்தச் சின்ன அறையில் இரகசியங்களை மானசிகமாகத் தவிர வைத்துக் காப்பாற்ற முடியுமா?

ஜெயில் சூப்பிரண்ட் பரமேசுவரத்திற்கு, திடீரென்று சோதனை போடவேண்டும் என்று பட்டது. மகாத்மா "எனது

அந்தராத்மா" என அடிக்கடி சொல்லுகிறாரே. அதுபோல் இவருக்கும் கொஞ்சம் இருக்குமோ என்னவோ?

கேட்பானேன்? வெகு நுணுக்கமாக எழுதிய அந்தக் காகிதக்கத்தை அகப்பட்டுக்கொண்டது; அதைப் பறிமுதல் செய்தார்.

43 நெ. அதை எடுத்துக்கொள்ளும்பொழுது பட்ட துடி துடிப்பைப் பார்க்க வேண்டுமே. உயிரையே வேண்டுமென்றாலும் பணயம் வைப்பதுபோல்......இவனைக் கேட்காமலே பிரியப் போகிற இந்தப் பொக்கான உயிரை மட்டுமா? தனது சக்தி முழுவதையும் வைத்துப் போராடினான். நான்கு வார்டர்களும், ஒரு சூப்பிரண்டும் எதிர்க்கும் பொழுது அந்தச் சின்ன அறையில் எப்படிப்பட்ட சண்டைக்கும் ஒரேவிதமான முடிவுதான் உண்டு. அதுதான் நடந்தது.

43 நெ. க்குப் பலத்த காயம். புற உடம்பில் மட்டுமா? அது மட்டுமானால் தான் அதை ஒரு பொருளாக மதிக்கமாட்டானே? ஆத்மா, உலகம், இலட்சியம் எல்லாம் பறிபோனதுபோல் துடித்தான்; சோர்ந்தான். அந்தப் பெண் தனது சினேகிதி வந்தால்...ஐயோ!...அவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது.

ஜெயில் ஆஸ்பத்திரியில் மருந்து போட்டார்கள். தூக்குத் தண்டனை ஒத்தி வைக்கப்பட்டது.

அன்று சிநேகிதியைக் காண அனுமதிக்கவில்லை.

## II

"நல்லார், அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை" என்பது ஒரு தத்துவப் பிரமை. இதற்கு எதிர்மறையாக தீயார், அவர் பொருட்டாகச் சில்லரை வலுவாகச் சிறை செய்ய வேண்டியது என்பது ஒரு சமூக உண்மை.

பரமேச்வரம் சூப்பிரண்டாக இருந்தாலும் ஒரு சிறைவாசி தான். அந்தச் சமூக உண்மைக்கு உதாரணம், இவரும் அந்த ஜெயில் காம்பௌண்டிற்குள்தான் குடியிருக்கிறார். இவர் இஷ்டம்போல் அனுவசியமாகச் சுற்ற முடியாது. கைதிகளைக் காப்பதற்கு இவரும் சிறைவாசம் செய்ய வேண்டியிருக்கிறது.

காம்பௌண்ட் சுவற்றிலிருந்து ஒரு கருத்த உருவம் குதிக்கிறது.

கடமை! வார்டர்களைக் காணும். அந்தப் பக்கம் சற்று ஒரு மாதிரிதான்.

ஒரே பாய்ச்சலில் எட்டிப் பிடித்துக் கொள்ளுகிறார்.

சல்லடம் தரித்த பெண்.

அவன் சிநேகிதை.

"நீ" என்றார்.

"ஆம்! அவரைப் பார்க்கவேண்டும். அனுமதி இல்லா விட்டால் வழியுண்டு."

"பார்க்கக் கூடாது! வீணாக நீயும் அகப்பட்டுக் கொள் ளாதே போய்விடு. நீ சிறுமி!"

"நான் பெண்ணுமல்ல, சிறுமியுமல்ல. எங்கள் சமுதாயத் தின் அடிமை; தொண்டர்."

"நம்முடைய சமுதாயமில்லையா?" என்று சிரித்தார்.

"நீ ஒரு துரோகி. உனக்கு அங்கு இடம் கிடையாது" என்றாள்.

அவள் கையில் தொங்கிக் கொண்டிருந்த பையில் என் னமோ சிறிய கட்டு பொத்தென்று விழுந்தது.

இருவரும் மௌனமாக நிற்கின்றனர்.

"நீ" என்றாள்.

"போ! போ!"

அவளை ஒரு தூக்காகத் தூக்கி காம்பௌண்ட் மதில்மேல் வைத்தார். அடுத்த நிமிஷம் அந்த உருவம் மறைந்தது.

"பறிமுதல் செய்யப்பட்ட சிறு காகிதக் குப்பை, கைதி 43 நெம்பரின் பைத்தியக்கார உளறல்களாக இருந்ததால் அழிக்கப் பட்டது" என்று எழுதிவிட்டு நாற்காலியில் சாய்ந்தார்.

எது பறிமுதலானது?

# புதிய கந்தப் புராணம்

## தற் சிறப்புப் பாயிரம்

இரண்டும் இரண்டும் நான்கு என்ற மகத்தான உண்மையைக் கவிதையாக இசைக்கும் இந்தக் காலத்தில், உள்ளது உள்ளபடியே சொல்லவேண்டு மென்ற சத்திய உணர்ச்சியும் பகுத்தறிவும் பிடர் பிடித்துத் தள்ளும் இந்தக் காலத்திலே, அதன் தனிப் பெருமையாக ஓர் அழியாத காவியம் செய்ய என்னை எனது உள்ளுணர்வு தூண்டியது. அதன் விளையாட்டை யாரே யறிவர்! இந்தக் காவியத்தில் பச்சை உண்மையைத் தவிர வேறு சரக்கு ஒன்றும் கிடையாது. ஆதலால் பகுத்தறிவு அன்பர்களும் ஏனையோரும் படித்து இன்புறுமாறு வேண்டிக் கொள்ளுகிறேன். காவியமும் உங்களைக் களைப்புறுத்தாதபடி, கம்பனைப் போலல்லாமல், சிறிய கட்டுக்கோப்பி லிருப்பதற்கு நீங்கள் எனக்கு வந்தனமளிக்க வேண்டும்.

நாட்டுப் படலம்

திருநெல்வேலி ஜில்லா மூன்று விஷயங்களுக்குப் பிரசித்தி பெற்றது. ஒன்று சிவன் என்ற 'பிறவாத பெம்மான்' பிறந்தது. இரண்டாவதாகத் தென்றல் பிறந்தது அங்கு. மூன்றாவதாகத் தமிழ் பிறந்ததும் அங்குதான். இந்த மூன்று பெருமையிலேயே 20-ம் நூற்றாண்டு வரை திருநெல்வேலி ஜில்லா மெய் மறந்து இருந்தது.

துன்பம் தொடர்ந்து வரும் என்பது பழமொழி. புகழும் பெருமையும் அப்படித்தான் போலிருக்கிறது. 20-ம் நூற்றாண்டிலே உலக மகா யுத்தம் நடந்து கொண்டிருக்கும் பொழுது இந்தப் பொல்லாத அதிர்ஷ்டம் மறுபடியும் திருநெல்வேலியைத் தாக்கிற்று. இந்த முக்கியமான சம்பவம் என்னவெனில், கந்தப்ப பிள்ளை 1916-ம் வருடம் திருநெல்வேலியில் திரு அவதாரம் செய்தது தான்.

### ஆற்றுப் படலம்

தாமிர வருணி நதி எப்பொழுதும் வற்றாது என்பது சம்பிர தாயம். அந்தச் சம்பிரதாயத்திற்குப் பங்கம் இந்தக் கலி காலத் தில் வந்துவிடுமோ என்று பயந்து முனிசிபல் உப நதிகள் பல அதில் வந்து சேருகின்றன.

### நகரப் படலம்

இந்தப் புனிதமான நதி தீரத்திலே, வண்ணாரப்பேட்டை என்ற திவ்யப் பிரதேசம் ஒன்று உண்டு. சாட்சி சொன்ன கோமுட்டிச் செட்டி கண்ட குதிரையைப் போல், பட்டணத்தின் தொந்திரவுகளுடன் கிராமத்தின் அழகையும் பெற்றிருந்தது. அதாவது தமிழர்களில் நாகரிக வைதீகர்கள் மாதிரி, குடுமியும், விபூதியும், ருத்திராட்சமும், ஸெர்ஜ் ஸர்ட்டும் ஐக்கியப் பட்டுப் பரிணமிக்கும்—தமிழ் நாட்டு வைதீகர்கள் மாதிரி இரண்டையும் பெற்ற ஓர் ஸ்தலமாக இருந்தது.

இதன் ஸ்தல புராணம், கபாடபுரம் கடலுடன் ஐக்கியப் படும்பொழுது மறையா விட்டாலும், சமீபத்தில் வந்த தாமிர வருணியின் வெள்ளத்தினால், ஆற்றில் நித்திய மோன சமாதி யடைந்தது என்பது, வண்ணாரப் பேட்டை முதியோர்களின் வாக்கு.

இந்தக் கிராம-நகரில் கூட கோபுரங்களும் மாட மாளிகை களும் இல்லாவிடினும், கூரை வீடுகளுடன் தோளோடு தோள் கொடுத்து நிற்கும் காறை வீடுகளும் உண்டு. இவையெல்லாம் அவ்வூர் பெரியார்களின் வாசஸ்தலம் என்பது உண்மையிலும் உண்மை.

இவ்வூரில் கோவில்களும் உண்டு. அதாவது பட்சபாதமில் லாமல், சிவபிரான் விஷ்ணுவாக முயன்ற—(அது ஊர்க்காரர் களின் முயற்சி; இந்த உரிமை சிதம்பரத் தலத்தில் மட்டு மில்லை)—ஒரு கோவில். "கூறு சங்கு தோல் முரசு கொட் டோசை"யல்லாமல் மற்றொன்றும் அறியாத வேறொரு சிவ பிரான். அப்புறம் ஒரு பேராச்சி,—எங்கள் ஸ்தலத்திலிருக்கும் மக்களின் ரத்த வெறியையும் வீரத்தையும் எடுத்துக் காட்டும்

பேராச்சி ; இன்னும் ஒன்றிரண்டு குட்டிச் சுடலை மாடன்கள் ; இவைதான் அத்தலத்தின் தெய்வங்கள் ;—காவல் தெய்வங்கள்.

## திரு அவதாரப் படலம்

திருநெல்வேலியில் நான்காவது முக்கிய விஷயம் கி. பி. 1916-ம் வருடம் ஒரு இரவில், திரு அம்மையப்ப பிள்ளைக்கும், சிவகாமி அம்மாளுக்குமாக—அந்த அம்மாள் தான் பங்கெடுத்துக் கொண்டார்கள்—திரு கந்தப்ப பிள்ளை இந்த உலகில் ஜனித்தார்.

பிறக்கும் பொழுது உலகத்தில் ஒரு உற்பாதங்களும் தோன்றவில்லை. ஆனால் அவர் மற்றவரைப் போன்றவரல்ல என்பதை வருகையிலே எடுத்துக் காண்பித்து விட்டார். இவருடைய தாயார் இவர் வரும் வரை பிலாக் கணத்தையும், முனகலையும் கடைப் பிடித்திருந்தாலும் அவர் தாயின் வழியைப் பின்பற்றவில்லை. இதை அவர் தமது பெருமையை ஸ்தாபிக்க சரியான வழியென்று நினைத்திருக்கலாம். ஆனால் அவர் வருகையின் வரவேற்புக் கமிட்டியின் தலைவரான மருத்துவச்சியம்மாள் அப்படி நினைக்கவில்லை. அவரைத் தலை கீழாகப் பிடித்துக் குலுக்கி, முதுகில் கொடுத்த அறையில் ஆரம்பித்த அழுகை, அவர் வாழ்க்கையின் சூக்ஷ்ம தத்துவமாக ஜீவியத்தின் இறுதி வரை இருந்தது.

திரு. கந்தப்பபிள்ளை இவ்வுலகத்தில் வந்த பிறகு கார்த்திகைப் பெண்கள் அறுவரால்பாலூட்டி வளர்க்கப் படாவிட்டாலும், ஜாம்புத்தீபத்தின் மேற்கே இருக்கும் ஒரு ராஜ்யத்திலிருந்து வந்த இரும்பினுலான காமதேனுவின் பாலை அதாவது மெல்லின்ஸ் கிளாஸ்கோ, என்ற அம்ருதத்தை அருந்தி வளர்ந்தார் என்பதை உணர வேண்டும். பழைய ஹோதாவில் சிறு பறையும் சிறு தேரும் இழுத்துத் திரியாவிட்டாலும், சிறு டிரமும் (Drum) சிறு தகர மோட்டாரும் அவருக்கு விளையாட்டுக் கருவிகளாக இருந்தன. சிவகாமியம்மாள், "செங்கீரையாடியருளே" என்றும், "முத்தந்தருகவே" என்றும் சொல்லா விட்டாலும், கையிலிருந்ததை வைத்துக் கொண்டு அவர் இந்த உலகத்தில் ஜனித்தவுடன் ஆரம்பித்த பிலாக்கண தத்துவத்தை நன்ருக வளர்த்து வந்தாள். காலா காலத்தில் வித்யாரம்பமும்

ஆயிற்று. அவரது குரு, கல்வி என்ற ஹோதாவில் புதிதாக ஒன்றும் சொல்லிக் கொடாவிட்டாலும், "தான்பெற்று, தாய் வளர்த்த" கந்தப்ப பிள்ளையின் பிலாக்கணத் தத்துவத்தை அருங் கலையாகத் தமது செங்கோலால் பாலித்து வந்தார். கந்தப்ப பிள்ளையும் உருண்டு செல்லும் கல்போலும், காற்றிலகப் பட்ட காற்றாடி போலும், வகுப்புப் படிகளைக் கடந்து கல்விக் கோயிலின் வெளி வாயிலை யடைந்தார்.

### திருமணப் படலம்

இச்சமயத்தில் அம்மையப்ப பிள்ளையும் சிவகாமியம்மாளும் ஒரு சிறு கூட்டுக் கமிட்டியில் ஆலோசித்து, தமது திரு மகனுக்குத் திருமணம் செய்விப்பது என்று தீர்மானித்தார்கள்.

வேங்கை மரத்தடியில் யானையைக் கொண்டு பயமுறுத்திக் காதல் கொள்ள வண்ணாரப்பேட்டையில் வசதியின்மையால், "தந்தை சொல் மிக்க மந்திரமில்லை" என்று, 4000 ரூபாய் தொகையுடன் தினை விளை கிராமத்து நம்பியா பிள்ளையின் ஏக புத்திரியாகிய ஸ்ரீமதி வள்ளியம்மாளை மணம் செய்ய உடன் பட்டார். திருமணம் ஏக தட புடலாக அதற்கிருக்க வேண்டிய சண்டை, தோரணைகளுடன் இனிது நிறைவேறியது. மணம் முடியும் வரை கந்தப்ப பிள்ளைக்குத் தனது சகதர்மிணியைப் பார்க்கத் தைரியமில்லாமலிருந்தது. மணம் முடிந்த பிறகும் பார்க்காமலிருக்க முடியாதாகையால் பார்த்தார். அம்மணி என்னவோ அவர் கண்களுக்கு அழகாகத் தான் தோன்றினாள்.

அவருக்குத் தமது சகதர்மிணியைப் பற்றிக் கிடைத்த செய்திக் குறிப்பில், அவள் படித்தவள் என்றும், சங்கீதப் பயிற்சி உடையவள் என்றும் கண்டிருந்தது. அவள் கல்வி 'குட்டிப் பாலர்' என்பதில் முற்றுப்புள்ளி பெற்றது என்றும், ஹார்மோனியம் வாசிப்பது சுருதிக் கட்டைகளின் மீது எலி ஓடுவது போன்ற இனிய கீதம் என்றும் கண்டுகொண்டார். திரு. கந்தப்ப பிள்ளைக்கு சங்கீதம் பிளேட் கேள்வி ஞானம். அதிலும் வண்ணாரப்பேட்டையில் கிடைக்கக் கூடிய ஓட்டைப்பிளேட் ஞானம். இரண்டும் ஏறக்குறைய ஒத்திருந்ததினால் தமது சகதர்மிணிக்கும் சங்கீதப் பயிற்சி உண்டு என்பதை உணர்ந்தார்.

உலாவியல் படலம்

இதற்குள் காலாசாலை என்ற வானத்திலிருந்து பேனு என்ற தெய்வீக ஆயுதமான வேலும் கிடைத்தது. பசி என்ற சூரபத்மனைக் கொல்லப் புறப்பட்டார். தாயின் இளமைப் பயிற்சியானது கல்வி மன்றத்தில் நன்ருகக் கடைந் தெடுக்கப்பட்டு, இப்பொழுது நன்ருகப் பரிணமித்து விட்டது. அந்த மகத்தான பிலாக்கணம் என்ற சங்கநாதத்துடனும், பேனு என்ற வேலுடனும் அவர் ஏறி இறங்கிய மாளிகைகள் எண்ணத் தொலையாது. கடைசியாக 30-ரூபாய் யென்ற முக்தி பெறும் காலம் வந்ததும், தினம் பசி என்ற சூரபத்மனைத் தொலைத்தவண்ணம் தமது இல்லறத்தை நடாத்துகிருர்.

சுபம்! சுபம்! சுபம்!

புதிய கந்தப் புராணம் முற்றிற்று

திருச்சிற்றம்பலம்.

# புதுமைப்பித்தன் வரலாறு

தன்னுடைய எழுத்துக்களை என்றென்றும் நமக்களித்துச் சென்ற சிறுகதை மன்னன் புதுமைப்பித்தனைப் பற்றி அறிந்து கொள்ளும் ஆசை ஒவ்வொரு தமிழனுக்கும் இருக்கும். தனக்கு மட்டுமன்று தன் தாய் மொழிக்கும் பெருமை தேடித் தந்தவர் அவர்.

அவரது வரலாறு சுவை மலிந்த நெஞ்சுரம் மிகுந்த, நேர்மைத் திறம் நிறைந்த ஒரு வீர வரலாறாகும்.

அவரோடு நெருங்கிக் கலந்து பழகிய திரு. ரகுநாதன் வரைந்துள்ள வரலாறு என்றால் அதுபற்றிக் கூறுவதற்கு வேறு என்ன சொல்ல வேண்டும்!

**விலை ரூ. 3 0 0**

★

**STAR PUBLICATIONS**

Triplicane :: Madras—5.




**Printed at Commercial Printing & Publishing House, Madras 1.**